# காலங்களும் யுகங்களும்



திருமறை அறிஞர்
Rev. Dr. A. கிறிஸ்டோபர்

# காலங்களும் யுகங்களும்

ஆசிரியர்
திருமறை அறிஞர்
Rev. Dr. **அ.கிறிஸ்டோபர்**

வெளியிடுவோர்
**விண்ணக அப்பம்**
நேரு வீதி,
சூரம்பட்டி, ஈரோடு – 9.

RE-EDITION - April 2007
TOTAL COPIES - 2000
COPY RIGHT - TO AUTHOR
PRICE - Rs. 40.00 (IN INDIA)
BOOK NUMBER - T 8

**FOR DETAILS CONTACT**
**WINNAGA APPAM**
**No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323 (Off)**
**Cell : 98433 - 58824**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediffmail.com**

# அணிந்துரை

திருமறைப் பெரியார்
மறைதிரு. **யோபு ஞானப்பிரகாசம்**
இந்தியன் பெந்தேகொஸ்தே அஸம்பிளீஸ்,
கோயமுத்தூர் – 12

'காலங்களும் யுகங்களும்' என்ற மிகச்சிறந்த இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவதற்காய் அக மகிழ்கிறேன். இதன் ஆசிரியர் பாஸ்டர். அ. கிறிஸ்டோபர் அவர்களை நான் நன்கு அறிவேன். இவர் பெரியார் மாவட்டத்தின் தலைநகராகிய ஈரோட்டில் எங்கள் இ.பெ.அ.ஸ்தாபனத்தின் சபைப்போதகராகவும், மாவட்ட மத்தியப் போதகராகவும் பணியாற்றி வருகிறார்.

கருகலான சத்தியங்களின், கட்டுகளை அவிழ்த்து எளிய நடையில் இனிய தமிழில், பண்டிதர்கள் புரிந்து கொள்ளக் கூடியவைகளை பலரும் புரிந்து கொள்ளும் விதத்தில் பாங்காய் எழுதக் கூடியவர். இவருடைய முந்தின நூல்கள் அநேக ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் மிகுந்த பிரயோஜனமுள்ளதாக இருக்கிறதென்பதை பலர் மூலம் அறிந்திருக்கிறேன்.

இப்பொழுது இவர், 'காலங்களும் யுகங்களும்' என்ற தலைப்பில் மிக அரிய நூலை எழுதி வெளியிட்டதை குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இதன் ஆக்கியோன் பல நூல்களை ஆராய்ச்சி செய்து வேத அடிப்படையில் தக்க ஆதாரங்களுடன் மிகத் தெளிவாக எழுதியுள்ளார்.

மேற்கண்ட சத்தியங்கள் அடங்கியுள்ள இந்நூலை இக்கடைசிக் காலத்தில் அனைத்து ஊழியர்களும், விசுவாசிகளும் வாங்கி வாசித்து ஆண்டவருடைய வருகைக்கு ஆயத்தமாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்புத்தகத்தின் ஆக்கியோனை ஆண்டவர் ஆசீர்வதித்து, இதுபோன்ற இன்னும் கருகலான சத்தியங்களை தெளிவுபடுத்தி பல நூல்களை எழுத ஆண்டவர் அருள் புரிவாராக, அல்லேலூயா ஆமென்.

# ஆக்கியோன் உரை

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள வாசகர்களே! அன்பரின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள்.

இந்த உலகத் தோற்றத்திற்கு முன்பு என்ன இருந்தது? இனி இந்த உலகம் முடிந்த பிறகு என்ன இருக்கும்? போன்ற எத்தனையோ கேள்விகள் உங்கள் எண்ணங்களில் அலைபாய்ந்து கொண்டு இருக்கலாம்.

இதோ! உங்கள் நீண்ட நாள் கேள்விகளுக்கு பதில்கள் இந்த புத்தகத்தின் பக்கத்திற்கு பக்கம் புதையல் போல் கிடைக்கப்போகிறது.

வேதாகமம் கல்லூரிகளுக்கும் வேத விற்பன்னர்களுக்கும் மாத்திரம் சொந்தமாயிருந்த மிக ஆழமான சத்தியங்களை மிக எளிய நடையில் ஒரே முறை வாசித்த உடன் புரிந்து கொள்ளும் விதத்தில் தொகுத்து வகுத்து பகுத்து எழுதியிருக்கிறேன்.

பூர்வ உலகம் முதல் புது உலகம் வரை புரியும் விதத்தில் எழுதப்பட்டுள்ள இந்த சத்தியங்கள் உங்களை கிருபையில், சத்தியத்தில், உபதேசத்தில் நிற்கச் செய்யும் இலக்கை நோக்கி ஓடச் செய்யும் என்பது நிச்சயம்.

தேவ ஆவியின் ஒத்தாசையுடன் வேத புத்தகத்தின் துணையுடன் வாசியுங்கள் தேவன் உங்களை ஆழமான சத்தியங்களுக்குள் நடத்துவாராக.

அன்போடும் ஜெபத்தோடும்
அவர் சேவையில்
**அ.கிறிஸ்டோபர்**

## அர்ப்பணம்

தாழ்வில் என்னை நினைத்தவரே!
தயவாய் என்னை அழைத்தவரே!
கருவில் என்னை கண்டவரே!
கருத்தால் என்னை நிறைத்தவரே!

சத்திய வசனத்தில் தேற – ஜனம்
சத்துவம் பெற்றென்றும் வாழ – நான்
துத்தியம் செய்தே இந் நூலை – எம்
நித்தியரே நின்பாதம் படைக்கிறேன்.

இவண்
ஆக்கியோனும், அர்ப்பணிப்போனும்
**அ.கிறிஸ்டோபர்**
I.P.A. ஜெபவீடு, ஈரோடு –9.

## பொருளடக்கம்

அத்தியாயம்


1. காலங்கள் – யுகங்கள் – அறிமுகம்
2. அநாதி காலமும், தூதர்களின் யுகமும்.
3. குற்றமில்லாமையின் யுகம்.
4. மனச்சாட்சியின் யுகம்.
5. மனித அரசாட்சியின் யுகம்.
6. வாக்குத் தத்தத்தின் யுகம்.
7. நியாயப் பிரமாண யுகம்.
8. கிருபையின் யுகம்.
9. இனிவரும் காலமும், கிறிஸ்துவின் யுகமும்.
10. காலங்களின் காலமும், பரிபூரண யுகமும்.

# 1 காலங்கள் – யுகங்கள் – ஓர் அறிமுகம்

உங்கள் கையிலிருக்கும் வேதாகம புத்தகம் மிக விசேஷமான புத்தகம். மற்ற புத்தகங்களைப் போல் ஒரு குறிப்பிட்ட நோக்கில், எல்லைக்குட்பட்டு எழுதப்பட்டதல்ல இஃது. பல மகிமையான காரியங்களை உங்களுக்கு எடுத்தியம்பும் இணையில்லாத புத்தகம்.

சுருங்கக்கூறின் நமது வேதாகமம் பட்டை தீட்டப்பட்ட ஒரு வைரக்கல்லைப் போன்றது. வைரக்கல் பட்டைக்குப்பட்டை புதுநிற ஒளியையும், புதுமைப் பொலிவையும் தருவதுபோல், வேத புத்தகமும் ஒவ்வொரு கோணங்களில் இருந்து பார்க்கும் போது கோடி கோடியான புதுமைப் பொக்கிஷங்களை அள்ளித் தருகிறது.

ஒரு புறம் பார்த்தால் கடந்த காலத்தை அறிவிக்கும் சரித்திரப்புஸ்தகம் – மற்றொரு புறம் பார்த்தால் எதிர் காலத்தை எடுத்துரைக்கும் தீர்க்கதரிசன புஸ்தகம், ஒரு புறம் பார்த்தால் வாழ்வின் வழிகாட்டிப் புத்தகம் – மறுபுறம் பார்த்தால் வாழ்வளிக்கும் வள்ளலின் வாக்குத்தத்தப் பெட்டகம். அப்பப்பா! சொல்லிக்கொண்டே போனால் வயது கூடுமே தவிர வார்த்தைகளுக்கே முடிவிராது.

இன்னும் இந்தப் புத்தகத்தை விளித்துக் கூறுவோமானால், அது உங்கள் வாழ்வின் நாடித்துடிப்பைக் காட்டும் ஸ்டெதஸ்கோப், தொலைவில் உள்ளவைகளைத் துல்லியமாகக் காட்டும் டெலஸ்கோப். கண்ணுக்குப் புலப்படா கர்த்தரின் காருண்யத்தை மனக்கண்களில் நுண்ணியமாய் மின்னிடச் செய்யும் மைக்ராஸ்கோப்.

மற்றவர்கள் பெருமை பாராட்டிக் கொள்ளும் அவர்தம் வேதங்கள் எல்லாம் சமகாலத்துக்கு உரிய ஒருவர் அல்லது இருவர் ஏககாலத்தில் எழுதியவைகள். ஆனால் நமது பரிசுத்த வேதாகமமோ நாற்பதுக்கும் மேற்பட்ட பரிசுத்தவான்களால், பல்வேறு இடங்களில் பல்வேறு காலக்கட்டங்களில் (பல ஆயிரம் ஆண்டுகள்) பல்வேறு சூழ்நிலையில் எழுதப்பட்ட பரிசுத்த ஆவியின் ''பரிசுத்தப்



பரிசு'' ஆகும்.

உலகத்தின் தோற்றம் முதல் (உலக தோற்றத்திற்கு முன்னும்) உலகின் முடிவு மற்றும் மகிமையின் நித்திய வாழ்வு வரை தப்பில்லாமல் விளக்கம் கூறும் ''ஒப்பில்லாத புத்தகம்'' என்பதே இஃதின் தனிச்சிறப்பு.

நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கிற இந்தப் புத்தகத்தில் விவிலியம் கூறுபவைகளையே சற்று விளக்கமாக எழுதுகிறேன். ''காலங்களும் யுகங்களும்'' என்ற தலைப்பில் அநாதி காலம் முதல் இனிவரப் போகும் நித்தியம் வரை தேவனுடைய திட்டங்கள், செயல்பாடுகள், மீட்பின் கிரியைகள், நியாயத் தீர்ப்பின் முறைகள் இவைகளை கிரமமாக கவனிக்கப்போகிறோம்.

பண்டிதர்கள் மட்டும் புரிந்து கொள்ளக்கூடியவைகளை பரிசுத்த ராஜ்யத்திற்கு அழைக்கப்பட்ட அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும் என்ற அவாவில் இஃதினை எழுதுகிறேன்.

வேத புஸ்தகத்தை தெளிவான கண்ணோட்டத்தில் வாசித்து பார்த்தால் வெளிப்படையாய் எழுதப்படாத பல காரியங்களை காணலாம். உதாரணமாக தேவனால் உண்டாக்கப்பட்ட பூமி பலமுறை தேவ கோபத்திற்கு இலக்காகி சாபத்தையும், சாப விமோசனத்தையும் பெற்று இருக்கிறது. (பெறப்போகிறது)

அதைப்போலவே தேவன் உண்டாக்கின மனுக்குலம் கீழ்ப்படியாமல் போகும்போது தேவன் நியாயம் தீர்த்தாலும் மன்னிப்பு வழங்கி மறுவாழ்வு கொடுத்திருக்கிறார். (கொடுத்தும் வருகிறார்)

இந்த செயல்பாடுகளில் ஒருவித கிரமும் ஒழுங்கும் இருக்கிறதை வேதத்தை வாசிக்கும்பொழுது தெளிவாக உணரலாம். இதன் அடிப்படையில் விளக்கம் தருவதே காலங்களும் யுகங்களும்.

'காலங்கள்' என்பது வேறு. 'யுகங்கள்' என்பது வேறு. காலங்களும் யுகங்களும் வெவ்வேறு அடிப்படையில் வெவ்வேறு நோக்கில் பிரிக்கப்படுகிறது. எனவே 'காலங்கள்'

'யுகங்கள்' என்ற வார்தைகள் எவைகளைக் குறிக்கிறது என்பதை அறிதல் அவசியம்.

**காலங்கள் :**

காலங்கள் – என்பது பூமியின் இயற்கை அமைப்பில் தேவ நியாயத் தீர்ப்பின் நிமித்தம் ஏற்பட்ட (ஏற்படும்) இரண்டு பெரிய மாறுதலுக்குட்பட்ட நாட்கள் காலங்கள் எனப்படும்.

ஆதியாகமம் முதல் அதிகாரம் முதல் வசனத்தில் 'ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்' என்று எழுதியிருக்கிறது. ஆனால் ஆதி 1:2 இல் பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது என்று எழுதப்பட்டுள்ளது. (ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் ஆக்கப்பட்டது என்று மூல பாஷையில் எழுதப்பட்டுள்ளது.) இப்படி ஒழுங்கின்மையும் வெறுமையுமான உலகத்தை சீர்படுத்த (உண்டாக்க அல்ல) ஏழு நாட்களை தேவன் எடுத்துக்கொண்டார்.

எனவே உலகம் சிதைதலுக்கு முன்பு தேவன் அநாதியாய் இருந்த காலம் **(1) அநாதிக் காலம்** என்று அழைக்கப்படும்.

தேவன் சீர்படுத்திய உலகத்தில் ஆதாம் ஏவாள் சந்ததி மூலம் மக்கள் பெருகினர். அவர்கள் அக்கிரமத்தினை முன்னிட்டு நோவா காலத்தில் மாபெரும் அழிவு ஜலப்பிரளயத்தினால் வந்தது. அந்நாட்களில் பூமியின் இயற்கை சூழ்நிலையில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது. மழை, பருவ காலம், வானவில் போன்றவை உண்டாயிற்று.

எனவே ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் சொல்லப்பட்ட பூமியின் சீரமைப்பு முதல் ஆதியாகமம் 8ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட பிரளயத்தின் அழிவு வரை உள்ள காலத்திற்கு **(2) பிரளயத்திற்கு முந்திய காலம்** என்று பெயர்.

நோவா கால பிரளயத்திற்குப் பிறகு உள்ள பூமியில் தான் நாம் இப்பொழுது இருந்து வருகிறோம். இதில் இதுவரை எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆகிலும் இயேசு கிறிஸ்து இரண்டாம் வருகையில் இவ்வுலகில் வந்து



ஆளத்துவங்கும் போது ஏசாயா தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டபடி வனாந்திரம் வயல் நிலமாக மாறும். மனிதருடைய ஆயுசு காலம் பெருகும், இயற்கையில் மாபெரும் மாற்றம் ஏற்படும்.

எனவே நோவா காலத்து வெள்ளம் முதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை (பகிரங்க வருகை) உள்ள காலம் **(3) பிரளயத்திற்குப் பிந்தின காலம்** என்று அழைக்கப்படுகிறது.

இயேசுகிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியில் பூமி செழித்திருக்கும். ஆயிர வருட ஆட்சியின் முடிவில் வானமும் பூமியும் தேவ கட்டளைப்படி அக்கினியினால் அழிக்கப்படும். அதன் பின்னர் புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும்.

எனவே ஆயிர வருட ஆட்சியின் துவக்கம் முதல் முடிவு வரை உள்ள காலம் **(4) இனிவரும் காலம் எனப்படும்.**

புதிய வானம் புதிய பூமி உண்டான பிறகு இரவு பகல் இராது. தேவன் தாமே நித்திய வெளிச்சமாய் இருப்பார். அநாதி காலத்தில் இருந்தது போல் தேவன் நிலையாய் இருப்பார். இது (5) **காலங்களின் காலம்** அல்லது நித்தியம் என்று அழைக்கப்படும்.

எனவே காலங்கள் என்பது (1) அநாதி காலம் (2) பிரளயத்திற்கு முந்தின காலம் (3) பிரளயத்திற்கு பிந்தின காலம் (4) இனி வரும் காலம் (5) காலங்களின் காலம் என்று பிரிக்கப்படுகிறது.

இதில் அநாதி காலம் (முந்தின நித்தியம்) மற்றும் காலங்களின் காலம் (பிந்தின நித்தியம்) ஆகியவற்றில் இரவு பகல் கிடையாது. எனவே நாட்கள் கணக்கும் இல்லை. ஆனால் இவைகளுக்கு இடைப்பட்ட மூன்று காலங்களிலும் 24 மணி நேரம் கொண்ட நாள் கணக்கும், இரவு பகலும் உண்டு என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

**யுகங்கள் :**

முந்தின நித்தியத்திற்கும் பிந்தின நித்தியத்திற்கும் இடைப்பட்ட காலங்களில்தான் மனுவர்க்கத்தின் ஆயுள்

சக்கரம் சுழல்கிறது. பிரளயத்திற்கு முந்தின காலத்தின் துவக்கத்தில் ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டான். ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு நடைபெறும். அத்துடன் மனுஷனுடைய நாட்கள் முடிந்துவிடும். அதன்பின் தூதர்களைப் போல் நித்தியமாய் இருப்போம்.

அப்பொழுது, சிலர் தேவதூதர்களைப் போல பரலோகிலும், சிலர் பிசாசின் தூதர்களைப் போல் அக்கினிக் கடலிலும் முடிவில்லாமல் இருப்பார்கள்.

எனவே ஆதியாகமம் 1:27 முதல் வெளிப்படுத்தல் 20:15 ஆம் வசனம் வரை சொல்லப்பட்ட மனுக்குலத்தின் ஆயுள் சக்கரத்தில் தேவதிட்டத்தின்படி, மீட்பின் கிரியைகளில் ஏற்படும் மாறுதலின் அடிப்படையில் பிரிக்கப்படுவதே யுகங்கள்.

'யுகம்' தமிழில் சற்றுப் பொருத்தமில்லாத வார்த்தையே. Dispensation என்ற ஆங்கில வார்த்தை நிர்வாகம், விசாரிப்பு என்று பொருள்படும். எனவே மனுவர்க்கத்தில் தேவனுடைய இரட்சிப்பின் கிரியையின் மாறுபட்ட தன்மையை விளக்கும்படி பயன்படுத்தப்படும் வார்த்தையே 'யுகம்' என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

'யுகம்' என்றால் தமிழில் பொதுவாக பல இலட்சம் மற்றும் கோடி ஆண்டுக் கணக்கை குறிக்கும். புராணங்கள் கூட 'கலியுகம்' போன்ற வார்த்தைகளை பயன்படுத்துகிறது. Dispensation என்ற ஆங்கில பதத்திற்கு நமது முன்னோர்கள் சரியான தமிழ் வார்த்தையை கண்டு பிடிக்கத் தவறி விட்டார்கள்.

நான் இளவயதாயிருக்கும்போது 'செத்த காலேஜ்' என்ற சொல்வழக்கு சென்னையிலே இருந்தது. அது எதைக் குறிக்கும் தெயுமா? Muesium 'மியூசிய'த்தைத்தான் அப்படிச் சொல்வார்கள். காரணம் அப்போது அதை சரியான தமிழில் சொல்ல வார்த்தையை யாரும் தேடவில்லை. இப்பொழுது எங்கும் தமிழ், எதிலும் தமிழ் வந்தபொழுது 'அருங்காட்சியகம்' என்ற அழகான வார்த்தையை



பயன்படுத்துகிறார்கள்.

ஈண்டு இதைக் குறிப்பிடக் காரணம் 'யுகம்' என்ற வார்த்தை, வேறு வார்த்தை கிடைக்காததினால் வலிய வந்து உட்கார்ந்து கொண்ட ஒன்று – இதற்கு இனிய தமிழில் வார்த்தை குறிக்க எனக்கு விருப்பம் உண்டு. பண்டிதர்களைப் பகைத்துக் கொள்ள விருப்பமில்லை, எனவே யுகம் என்றே நாமும் சொல்வோம்.

நாம் முன்னே கவனித்த 5 விதமான காலங்களை 9 யுகங்களாகப் பிரிக்கலாம். அதிலும் மனுவர்க்கத்தோடு சம்மந்தப்பட்ட முக்கியமான மூன்று காலங்களை ஏழு யுகங்களாகப் பிரிக்கலாம்.

இப்படி காலங்களையும் யுகங்களையும் பிரித்து வாசிப்பதில் பலவிதமான கருத்து வேறுபாடுகள் பண்டிதர்கள் மத்தியில் நிலவுகிறது. இப்படி கருத்து வேற்றுமை தோன்ற அடிப்படைக் காரணம் அதற்கான திட்டமிடப்பட்ட வரையறை வேதத்தில் சொல்லப்படாததே.

ஒரு சம்பவத்தை எழுதுகிறேன். கவனியுங்கள். முன்பெல்லாம் தமிழில் எழுதும் போது வார்த்தைக்கு வார்த்தை இடைவெளி இராது. தொடர்ச்சியாய் எழுதுவார்கள். எனவே வாக்கியத்தை வாசிக்கிறவர்கள் தான் அதைப் பிரித்து வாசித்துக் கொள்ள வேண்டும். ஒரு இடத்தில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்ததாம்.

**"தலைவிதிவசம்போகிறேன்"**

இந்த வாசகத்தை 'தலை விதி வசம் போகிறேன்' என்று ஒருவர் வாசித்தாராம். 'தலைவி திவசம் போகிறேன்' என்று மற்றொருவர் வாசித்தாராம். இதில் யார் வாசித்தது சரி? யார் வாசித்தது தவறு? என்று எழுதியவருக்கே வெளிச்சம்.

இப்படித்தான் 'காலங்களும் யுகங்களும்' பண்டிதர்கள் எப்படிப் பிரித்தாலும் அது பிழையாகாது. ஆகிலும் அதன் விபரம் ஆண்டவருக்கே தெளிவாகத் தெரியும். எனினும் மிகுந்த கரிசனையுடனும், பரிசுத்தாவியின் ஒத்தாசையுடனும் பல பண்டிதர்களின் கருத்துக்களை வாசித்து, ஜெபத்துடன்

யோசித்து, ஞானத்தை தேவனிடத்தில் யாசித்து இப்புத்தகத்தை எழுதுகிறேன்.

இவைகள் உங்களுக்கு வேத அறிவை ஊட்டும் என்றும் தெளிவை உண்டாக்கும் என்றும் திடமாக நம்புகிறேன்.

ஐந்துவித காலங்களையும் 9வித யுகங்களையும் சேர்த்தே வரும் அதிகாரங்களில் கவனிக்கப்போகிறோம். எனவே எந்தக் காலத்தில் எந்தெந்த யுகங்கள் இருக்கிறது என்பதனை தொடர்ந்து கொடுக்கப்படுகிற அட்டவணையைப் பார்த்து மனதில் படிய வைத்துக்கொள்ளுங்கள்.

| காலங்கள் | யுகங்கள் |
|---|---|
| 1. அநாதி காலம் (முந்தின நித்தியம்) | 1. தூதர்களின் யுகம் |
| 2. பிரளயத்திற்கு முந்தின காலம் | 2. குற்றமில்லாமையின் யுகம்<br>3. மனச்சாட்சியின் யுகம் |
| 3. பிரளயத்திற்கு பிந்தின காலம் | 4. மனித அரசாட்சியின் யுகம்<br>5. வாக்குத்தத்த யுகம்<br>6. நியாயப் பிரமாண யுகம்<br>7. கிருபையின் யுகம் |
| 4. இனிவரும் காலம் | 8. கிறிஸ்துவின் யுகம் |
| 5. காலங்களின் காலம் | 9. பரிபூரண யுகம் |

# 2 அநாதி காலமும், தூதர்களின் யுகமும்

நம்முடைய தேவன் அநாதி தேவன் அவர் அநாதியாய் என்றென்றைக்கும் இருக்கிறார். இந்த வானமும் பூமியும் உண்டாக்கப்படுவதற்கு முன்பே நம்முடைய ஆண்டவர் மகிமையாய் இருந்தார். அது எத்தனை கோடி கோடி ஆண்டுகள் என்று நமக்குத் தெரியாது. நம்முடைய ஆண்டவர் சர்வ வல்லமையுள்ள தேவன், சர்வ வியாபி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவர்.

தேவன் தம்முடைய மகிமையினால் இந்த அண்டசராசரங்களையும் நேர்த்தியாய் சிருஷ்டித்தார். வானவெளியையும் கிரகங்களையும் நட்சத்திரங்களையும் அழகாக சிருஷ்டித்தார். நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு அழகாய் பெயர் சொல்லி அழைப்பது போல் நமது ஆண்டவர் நட்சத்திரங்களை பெயர் சொல்லி அழைக்கிறார். சங்கீதம் 147:4ஆம் வசனத்தைக் கவனித்துப் பாருங்கள். அவர் பெயர் சொல்லி அழைத்தது மாத்திரமல்ல. அவைகளை அவைகளின் இலக்கத்தை எண்ணி வைத்திருக்கிறார்.

இப்படிப்பட்ட மகிமையின் தேவனுடைய மற்றொரு மகிமையான படைப்பு தேவதூதர்கள். இப்படி தேவன் நட்சத்திரங்களையும், தூதர்களையும் உண்டாக்கின பின்பு இந்தப் பூமியை உண்டாக்கினார். ஆச்சரியமாய் இருக்கிறதா? யோபு புஸ்தகம் 38ஆம் அதிகாரம் 4ஆம் வசனத்தையும் 7ஆம் வசனத்தையும் சேர்த்து வாசித்துப் பாருங்கள்.

நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கே இருந்தாய்.... அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய் பாடி தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே! என்று எழுதியிருக்கிறது.

அப்படியானால் பூமி அஸ்திபாரப்படுத்தப் படுவதற்கு முன்பே தேவபுத்திரராகிய தூதர்கள் இருந்தார்கள் என்றும் நட்சத்திரங்கள் அவர்கள் குடியிருப்பாய் இருந்ததென்றும் தெளிவாக விளங்குகிறதல்லவா?

நம்முடைய ஆண்டவர் எங்கே வாசம் பண்ணுகிறார் என்ற இயல்பான கேள்வி உங்களுக்கு எழும்புகிறதல்லவா? சங்கீதம் 48:2 ஐ வாசித்துப் பாருங்கள். வட திசையிலுள்ள சீயோன் பர்வதம் மகாராஜாவின் நகரம் என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்படியானால் இந்த அண்ட சராசரத்தின் வடதிசை தேவனுடைய நகரம் என்று தெரிகிறதல்லவா?

வானவெளி ஆராய்ச்சியாளர்கள் வானவெளியைக் குறித்து புதிய தகவல்களைத் தெரிவிக்கிறார்கள். வானலோகத்தில் பல பால்வெளிகள் இருக்கின்றன. ஒரு பால்வெளி என்பது சூரியக்குடும்பத்தைப் போல் பல ஆயிரங்களை தனக்குள் அடக்கியது. இப்படிப்பட்ட பல பால் வெளிகள் வடதிசையிலுள்ள ஒளிமயமான ஒரு நட்சத்திர பால்வெளியை வேகமாக சுற்றி வருகிறது என்று கூறுகிறார்கள்.

நம்முடைய ஆண்டவர் வடதிசையில் மாத்திரமல்ல. மூன்றாவது வானத்திலிருக்கிறார். மூன்றாம் வானம் என்றால் என்ன? பறவைகளும் விமானமும் பறப்பது முதலாம் வானம்; கிரகங்கள் இருப்பது இரண்டாம் வானம். தேவன் வாசம் பண்ணுவது மூன்றாம் வானம்; ஒரு சிலருக்கு இது புதிதாய்த் தோன்றலாம். யூதர்கள் ஏழு வானம் இருக்கிறதென்று நம்புகிறார்கள்.

வேதம் மூன்று வானங்கள் இருப்பதை உறுதிப்படுத்துகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்போது (IIகொரி 12:2,3) தான் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும் அங்கு பரதீசுக்குள் சென்றதாகவும் எழுதியிருக்கிறார். மற்றொரு ஆணித்தரமான ஆதாரத்தை பின்னொரு சம்பவத்தில் குறிப்பிடுகிறேன்.

இப்படி மகிமையுள்ள ஆண்டவர் தம்மைப் போற்றிப் புகழ தூதர்களை உண்டாக்கினார். தூதர்களிலே பல கூட்டங்கள் உண்டு. கேருபீன்கள், சேராபீன்கள் போன்றவைகள் அவற்றுள் சில. இந்த தூதர் குழுக்களுக்கு



சில தலைவர்கள் இருந்தார்கள். அவற்றுள் பிரதான தூதனாகிய மிகாவேல், செய்தி கொண்டு போகும் காபிரியேல், லூசிபர் என்று ஆங்கில வேதாகமத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி ஆகியோர் பெயர் விளக்கமாக வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

இதில் அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி என்று அழைக்கப்பட்ட தூதன் மற்றவர்களைப் பார்க்கிலும் மிகவும் விசேஷமானவன். எசேக்கியேல் புஸ்தகத்தில் 28:12,13,14 ஆகிய வசனங்களில் அவனின் சிருஷ்டிப்பின் மகிமையை குறித்து விவரமாக எழுதப்பட்டுள்ளது. அந்தத் தூதன் விசித்திரமாய் செய்யப்பட்ட முத்திரை மோதிரம், ஞானத்தால் நிறைந்தவன், பத்மராகம், புஷ்பராகம் போன்ற ஒன்பது கற்களும் பொன்னும் அவனை மூடிக் கொண்டிருந்தது. எவ்வளவு அழகாய் இருந்திருப்பான் யோசித்துப் பாருங்கள்!

அதுமட்டுமா? அவன் சிருஷ்டிக்கப்பட்டபோது மேள வாத்தியங்களும், நாகசுரங்களும் அவனுக்குள் ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. இப்பொழுது இருக்கிற கேசியோ, கீபோர்டு எல்லாம் அப்பொழுதே அவன் செட்டைக்குள் இருந்தது. அவன் செட்டைகளை அடித்தாலே இன்னிசை பிறக்கும் என்று சில பண்டிதர்கள் கூறுகிறார்கள். அவன் காப்பாற்றுவதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப்.

ஆதியாகமம் முதல் அதிகாரம் முதல் வசனத்திற்கும், 2ஆம் வசனத்திற்கும் மிகப் பெரிய கால இடைவெளியும், சரித்திர இடைவெளியும் உண்டு. சற்றுக் கூர்ந்து வாசியுங்கள். ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் பூமி மாறுவதற்கு முன்பாய் பூமி அழகாகவும் அற்புதமாகவும் இருந்தது. ஆனால் தேவகோபத்தால் அது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் மாறிற்று. அது ஏன் அப்படியாயிற்று என்பதைத் தொடர்ந்து வாசியுங்கள்.

ஆதியாகமம் 1:1 இல் சொல்லப்பட்ட உலகம் மிக அழகாக இருந்தபோது வானத்திலுள்ள தூதர்கள் பூலோகத்திற்கு இறங்கி வந்து போய்க்கொண்டு இருந்தார்கள். இவர்கள் அதிகாலையின் மகனாகிய

விடிவெள்ளி என்னும் தூதனுடைய தலைமையில் தேவனுடைய சமூகத்திற்கு சென்று ஆராதித்து வந்தார்கள். அப்பொழுது இந்தப் பூமியில் ஜீவராசிகள் இருந்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளிக்கு ஒரு விபரீத எண்ணம் தோன்றிற்று. தனக்குப் பின்னால் ஒரு கூட்டம் தூதர்கள் இருக்கிறார்கள். நாம் ஏன் ஆண்டவருக்கு மேலே அதிகாரம் உடையவராய் மாறக்கூடாது என்று எண்ணினான். எண்ணத்தை அறிந்த ஆண்டவர் அவனைத் தள்ளினார்.

இந்த சம்பவத்தை ஏசாயா 14ஆம் அதிகாரம் 11 முதல் 15 வரை உள்ள வசனங்களில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே 'நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப் படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே' என்று தூதன் தள்ளப்பட்டதைக் குறித்து எழுதப்பட்டுள்ளது.

மேலும் அவன் என்ன சொன்னான் என்று கவனியுங்கள். 1. நான் வானத்துக்கு ஏறுவேன். 2. நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன். 3. வட புறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன். 4. நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன். 5. உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் தன் இருதயத்தில் சொன்னான்.

மேற்கூறிய வசனங்களைக் கவனித்துப் பாருங்கள். 'நான் வானத்துக்கு ஏறுவேன்' இது முதலாம் வானம், 'நட்சத்திரங்களுக்கு மேலாக' இது இரண்டாம் வானம். 'உன்னதங்களில் ஏறுவேன். இது மூன்றாம் வானம். அப்படியானால் மூன்று வானம் உண்டென்றும் இதை சொல்லும் பொழுது அவன் பூமியில் நின்றான் என்றும் 'ஜாதிகளை ஈனப்படுத்தினவனே' என்று எழுதப்பட்டுள்ளதால் அப்பொழுது பூமியில் ஜீவராசிகள் இருந்தது என்றும், வடபுறத்திலுள்ள ஆராதனை ஸ்தலம்



என்று எழுதப்பட்டுள்ளதால் மூன்றாம் வானத்தில் வடபுறத்தில் தான் மகாராஜாவின் நகரம் உள்ளதென்றும் தெரிகிறது அல்லவா?

இப்படி மேட்டிமையாயிருந்த அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியை தேவன் அடித்து விழத்தள்ளினார். அது மாத்திரமல்ல, அவனைப் பின்பற்றின தூதர்களையும் தேவன் தள்ளினார். அவர்கள் வானத்திலிருந்து தள்ளப்பட்டார்கள். அவர்கள் பூமிக்கு வருமுன்பே தேவன் பூமியை வெள்ளத்தினால் நியாயந்தீர்த்தார்: அது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் மாறிற்று; ஆழத்தில் இருளும் மேலே ஜலமும் மூடிக்கொண்டது.

மேலேயிருந்து தள்ளப்பட்ட பிசாசு பூமிக்கு வராமல் வானத்துக்கும் பூமிக்கும் இடையில் கூடாரம் போட்டு விட்டான். இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனை (எபேசியர் 6:12) என்று குறிப்பிடுகிறார்.

ஒரு காலத்தில் அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்பாக இருந்து பெருமையின் நிமித்தம் தேவனால் தள்ளப்பட்ட விழுந்துபோன தூதனே பிசாசு அல்லது சாத்தான் என்பவன் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும். இந்த சாத்தானே ஏதேன் தோட்டத்தில் வஞ்சிக்கும்படியாக வந்தான் என்று நீங்கள் அறிந்து கொண்டால் சாத்தான் எங்கிருந்து வந்தான் என்ற கேள்வி உங்களுக்கு எழாது.

அதைப் போலவே ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் தேவன் பூமியை சரிப்படுத்த எடுத்துக் கொண்ட ஏழு நாட்கள் பூமியின் சிருஷ்டிப்பின் நாட்களல்ல. இயற்கையின் சிருஷ்டிப்பின் நாட்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அதைப் போலவே 4ஆம் நாளில் சூரியன், நட்சத்திரங்கள் சிருஷ்டிக்கப்படவில்லை. சபிக்கப்பட்ட உலகத்தின் மேல் சுடர்களின் வெளிச்சம் உதிக்காததினால் மீண்டும் அவைகள் பூமிக்கு வெளிச்சம் கொடுக்க தேவன் கட்டளையிட்டார் என்பதை நீங்கள்

அறிந்து கொண்டால் சிருஷ்டிப்பைக் குறித்த ஐயப்பாடுகள் உங்களுக்குத் தெளிவாக நீங்கும்.

தூதர்களின் பாவத்தினிமித்தம் அழிக்கப்பட்ட இந்த உலகம் பல இலட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு தேவனால் சீர்படுத்தப்பட்டு ஆதாம், ஏவாள் மூலம் மனுஷ சந்ததிகள் பெருகி நிறைந்து இன்றளவும் இருக்கிறது. எனவே ஆதாம் உண்டாகி ஆறாயிரம் (6000) ஆண்டுகள் ஆகிறதே தவிர பூமி சிருஷ்டிக்கப்பட்டு அல்ல, பூமி உண்டாக்கப்பட்டு பல மில்லியன் ஆண்டுகள் ஆகிறது.

இப்பொழுது புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுக்கிற பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பான மனித வடிவங்கள் மற்றும் படிமங்கள் உலகம் சிதைவடைதற்கு முன்பாக இருந்த ஜீவராசிகளின் தடயங்களே என்று அறிந்து கொள்வீர்களாகில் விஞ்ஞானத்திற்கும் விவிலியத்திற்கும் வித்தியாசம் இல்லை என்ற விவரத்தை அறிந்து விசுவாசத்தோடு துதித்திட முடியும்.

தேவ கோபத்தினால் இந்த உலகம் சிதைக்கப்படுவதோடு முன்பு இருந்த எல்லாக் காலமும் முந்தின நித்தியம் என்று அழைக்கப்படும். இதில் தூதர்கள் சிருஷ்டிப்பிலிருந்து தூதர்களின் விழுகை வரை உள்ள நாட்கள் தூதர்களின் யுகமாகும். தூதர்கள் தோற்றுப் போனார்கள் ஆகவே உலகம் சிதைந்தது.

மீண்டும் இந்த பூலோகத்தை சீர்படுத்தி தேவன் மனிதர்களை உண்டாக்கினார். அவர்கள் தேவசித்தத்திற்கு கீழ்ப்படிந்தார்களா? மீறினார்களா? ஜெயித்தார்களா? தோற்றார்களா? இவர்களைக் குறித்த தேவனுடைய திட்டம் என்ன? இவர்களுக்கான தேவ தீர்ப்பு என்ன? இதைத்தான் தொடர்ந்து கவனிக்கப்போகிறோம்.

# 3 குற்றமில்லாமையின் யுகம்

ஆதாமையும் ஏவாளையும் (மனுக்குலத்தை) தேவன் தம்முடைய சொந்த சாயலாக சிருஷ்டித்தார். தேவ மகிமை அவர்களை மூடியிருந்தது. தேவனோடு அவர்கள் உலாவினார்கள். பேசினார்கள். இந்த யுகத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயரின்படியே அவர்கள் குற்றமில்லாமல் சுத்தமனச்சாட்சியோடு கூட இருந்தார்கள்.

இவர்களுக்கு தேவன் கொடுத்திருந்த சிலாக்கியங்கள் மகா உன்னதமானது. தேவன் அவர்களுக்கு பத்து விதமான வாய்வழி பிரமாணங்களை கொடுத்திருந்தார். 1. பலுகிப் பெருகுங்கள். 2. பூமியை நிரப்புங்கள். 3. பூமியை ஆண்டு கொள்ளுங்கள். 4. எல்லா மிருக ஜீவன்களையும் ஆண்டு கொள்ளுங்கள். 5. பூமியை கீழ்ப்படுத்திக் கொள்ளுங்கள். 6. மச்சங்களையும் பறவைகளையும் ஆண்டு கொள்ளுங்கள். 7. விருட்சங்களும் கனிகளும் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக் கடவது. 8. விலக்கப்பட்ட கனியைப் புசியாதிருங்கள். 9. தோட்டத்தின் சகல விருட்சங்களையும் புசியுங்கள் 10. விலக்கப்பட்டதை மீறிப் புசித்தால் சாவீர்கள் (ஆதி 1:28, 29, 2:16, 17)

இவர்களைப் போல சிலாக்கியம் பெற்றவர்கள் யாருமே இருக்க முடியாது. பகலின் குளிர்ச்சியான வேளையில் தேவன் தோட்டத்தில் உலாவினார். இவர்களும் தேவனோடே அளவளாவினார்கள். இவர்கள் அறிவில் குறைந்தவர் அல்லர். ஆதாம் விசேஷித்த ஞானம் பெற்றிருந்தார். உலகத்தில் தேவனால் உண்டாக்கப்பட்ட அனைத்து மிருகங்களுக்கும் பெயர் சூட்டும்படி தேவன் அவைகளை ஆதாமிடத்தில் அழைத்துக்கொண்டு வந்தார். அவைகள் அத்தனைக்கும் மிகப் பொருத்தமான பெயரை ஆதாம் வைத்தார்.

குற்றமில்லாமையின் காலத்தில் தேவனுடைய மிகச் சிறந்த படைப்பு குடும்பம் என்பதாகும். ஆம்! பாவம்

செய்வதற்கு முன்பாகவே பரிசுத்த நிலையில் தேவன் குடும்பத்தை ஏற்படுத்தினார். அதனால்தான் அப்போஸ்தலனாகிய பவுல் விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது என்று எழுதியிருக்கிறார்.

இன்றைக்கு ஒரு சிலர் விவாகத்தை விஷம் போல் கருதி விலக்கி விடுகிறார்கள். விவாகம் விஷம் என்றோ, குடும்பம் குழப்பம் என்றோ வேதத்தில் எங்குமே சொல்லப்படவில்லை. ஊழியர்களானாலும், விசுவாசிகளானாலும் விவாகம் கனமுள்ளதே. குடும்ப உறவை களங்கப்படுத்துகிறவர்களைக் குறித்து 1 தீமோத்தேயு 4ஆம் அதிகாரம் முதல் 3 வசனங்கள் மிகத் தெளிவாக விவரிக்கிறது.

மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போன பொய்யர்கள் விவாகம் பண்ணாதிருக்க வேண்டும் என்று கட்டளையிடுவார்கள் என ஆவியானவர் வெளிப்படையாய் எழுதி வைத்திருக்கிறார்.

தேவனோடு பேசின மோசேயும் தேவனால் எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனோக்கும், முதல் ஆசாரியனாகிய ஆரோனும், இருதயத்திற்கு ஏற்ற மேய்ப்பனாகிய தாவீதும், எழில்மிகு ஆலயம் கட்டின சாலொமோனும், இஸ்ரவேலரை திசை திருப்பிய தீர்க்கனாகிய ஏசாயாவும், அப்போஸ்தலரில் பிரதானமான கேபா எனப்பட்ட பேதுருவும், விவாக மானவர்களே என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

எனவே விவாக வாழ்க்கைக்கும், ஊழியத்திற்கும், குடும்பத்திற்கும் தேவனோடு உறவாடுவதற்கும் எந்தவிதமான சம்பந்தம் கிடையாது. தேவன் தாமே விவாகத்தை ஏற்படுத்தினார். விவாக விருந்தை ஆசீர்வதித்தார்.

விவாக வாழ்க்கையை உண்டாக்கினது மாத்திரமல்ல. சகல விலங்கினங்கள் மேலேயும் விருட்சங்கள் மேலேயும் அதிகாரத்தைக் கொடுத்தார். அப்போதெல்லாம் சிங்கம்



சீறிப்பாயாது. மிருகங்களே கூட ஒன்றை ஒன்று பட்சித்துக் கொள்ளாது. காரணம் மனிதர்களுக்கும் சைவ சாப்பாடு. மிருகத்திற்கும் சைவ சாப்பாடுதான்.

ஆதியாகமம் 1:29,30 ஐ வாசித்துப் பாருங்கள். உங்களுக்கும் பூமியிலுள்ள சகல மிருக ஜீவன்களுக்கும் ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும், ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் சகல பூண்டுகளையும், கனிகளையும் ஆகாரமாய்க் கொடுத்தேன் என்று எழுதியிருக்கிறார். எனவே ஆகாரத்திற்காக ஒன்றையொன்று பட்சித்துக்கொள்ளவில்லை.

எத்தனை மகிமையான அனுபவம் பார்த்தீர்களா! தேவனோடு இருந்தார்கள். சமைக்கிற வேலை இல்லை, துவைக்கிற வேலை இல்லை. பயப்படவேண்டிய சூழ்நிலைகள் இல்லை. சுதந்திரப் பறவைகளைப் போல் மனுவர்க்கத்தை மகேசன் படைத்தார்.

ஆகிலும் இந்த யுகத்தில் மனிதரை சோதித்து அறிய ஒரு சிறிய சோதனையை தேவன் வைத்தார். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம்; அதை 'நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்' (ஆதி 2:17) இதுவே அவர்களுக்கு தேவன் வைத்த சோதனை. நடந்தது என்ன? சர்ப்பத்தின் சொல் கேட்டு சோதனையில் தோற்றுப்போனார்கள்.

இவர்கள் தோற்றுப் போனதற்கு பல காரணங்கள் உண்டு. தேவன், 'புசித்தால் சாவாய்' என்றார். பிசாசு (சர்ப்பம்) 'புசித்தால் தேவர்களைப் போல் ஆவாய்' என்றான். இந்த இரண்டு வார்த்தைகளில் அலைமோதின இவர்கள் தேவனுடைய வார்த்தையின் மேல் சந்தேகப்பட்டு சாத்தானுக்கு செவிகொடுத்து வீழ்ந்து போனார்கள். இன்றைக்கும் அப்படித்தான். வசனம் சொல்வதைக் காட்டிலும் நயவசனிப்பாளர்களின் வார்த்தைகளுக்கே மக்கள் செவி கொடுக்கிறார்கள்.

கவனமாயிருங்கள். அன்றைக்கு சாத்தான் சர்ப்பத்தின் வடிவிலே தோட்டத்திற்குள் வந்தான்.

இக்காலங்களில் சாத்தான் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டு வருகிறான். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்துக்கு நிருபம் எழுதும்போதும் கபடமுள்ள வேலையாட்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள். ஆகவே உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன் (IIகொரி 11:13,3) என்று அங்கலாய்க்கிறார்.

பிரியமானவர்களே! கர்த்தருடைய வார்த்தைக்கு நூறத்தனையாய் செவி கொடுங்கள். நயவசனிப்புகளுக்கு மயங்கி, நவ நாகரிகத்தில் மோகமடைந்து, திருவசனத்தில் சந்தேகப்பட்டு திரும்பி விடாதீர்கள் இன்றே திருந்தி விடுங்கள்.

சர்ப்பம் ஏவாளைப் பார்த்து இந்தக் கனியைப் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ? என்று கேட்டது. இதற்கு ஏவாளின் பதிலைப் பாருங்கள். 'புசிக்கவும் வேண்டாம், அதைத் தொடவும் வேண்டாம் என்றார்' என்றாள் (ஆதி 3:3) ஏவாளின் பதிலில் தேவன் சொல்லாத ஒன்றைக் கூட்டி சொல்கிறாள். தேவன் தொட வேண்டாம் என்று சொல்லவேயில்லை. சொன்னார் என்று ஏவாள் கூட்டி சொல்கிறாள்.

இன்றைக்கு அநேகர் தோல்வியடைவதற்குக் காரணம் வேத வசனத்தோடு தங்கள் எண்ணங்களை கூட்டிப் பேசுவதே. என் வசனத்தோடே ஒரு வார்த்தையை கூட்டவும் வேண்டாம்; குறைக்கவும் வேண்டாம் என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். நீங்கள் தேவனுக்கு வைராக்கியமாய் பேசுகிறோம் என்று எண்ணி தேவன் சொன்னார் என்று சொந்த வார்த்தைகளை சொல்லி விடாதீர்கள்.

சபையில் சாட்சி சொல்லும்போது கூட பாம்பு வந்தது என்றால் பாம்பு வந்ததென்று சொல்லுங்கள். அளந்து பார்த்தது போல் பத்தடிப் பாம்பு என்றும் அது எட்டடி பாய்ந்தது என்றும் சொல்லாதீர்கள். இப்படிப்பட்ட



வசனிப்புகளால் உங்களை சறுக்க வைக்க சாத்தானுக்கு சௌக்கியமாய் இருக்கும்.

அந்தக் கனியை பறித்துப் புசித்தாள் என்பது பாவம் தான். ஆனால் அது வெளியரங்கமான கிரியை. பழத்தைப் புசிப்பதற்கு முன்பாகவே தன் மனநிலையில் பாவத்தில் விழுந்துவிட்டாள். அந்த விழுகைக்கு ஒரு முப்பரிமாணம் இருக்கிறது. ஆதியாகமம் 3:6ஐ வாசித்துப் பாருங்கள். அந்தப் பழக்கத்தைக் கண்டு (காட்சி) புசிப்புக்கு நல்லதென்று அறிந்து (உணர்ச்சி) புத்தியைத் தெளிவிக்கத்தக்கது (புகழ்ச்சி) என்று அறிந்து புசித்தாள்.

இந்தப் பழத்தை அவள் புசிப்பதற்கு காரணம் அது அழகாய் இருந்தது. எனவே அவள் விழுகையின் முதற்பரிமாணம் 'கண்களின் இச்சை' விசுவாசிகளை விழப்பண்ணுவதற்கு விவரம் அறிந்த சாத்தான் விநோதமான காட்சிகளைக் காட்டுகிறான். கவனமாயிருங்கள். கண்ணானது சரீரத்திற்கு விளக்கு; அது கெட்டுப்போனால் உங்கள் வாழ்வே இருளடைந்து விடும். எனவே கண்களின் இச்சைக்கு விலகியிருங்கள்.

பச்சைப் பசேலென்று இருக்கிறது என்று பச்சை நிறத்தில் மயங்கின லோத்து பாழாய்ப் போனான். சிவப்புக் கூழைக் கண்டு சிவப்பில் மயங்கிய ஏசா சேஷ்டபுத்திர பாகத்தை இழந்து போனான். உப்பரிகையின் மேல் உலா வந்த தாவீது உரியாவின் மனைவியை உற்றுப் பார்த்ததினால் குப்புற விழுந்தான். உங்கள் கண்களை கலிக்கம் போட்டு காப்பாற்றிக் கொள்ளுங்கள். கலரில் மயங்காதிருங்கள் – கலர் டி.வி. யிலும் மயங்காதிருங்கள்.

இதுவரை அந்தப் பழத்தை அவள் சாப்பிட்டுப் பார்த்ததே இல்லை. ஆனால் புசிப்புக்கு நல்லது என்று எவ்வளவு பட்சமாய் சொல்லுகிறாள் பாருங்கள். காரணம் அவளின் மாம்ச இச்சை தேவனின் வார்த்தையைத் துரத்தள்ளிவிட்டு பழத்தைப் புசிக்க இச்சையை உண்டாக்கியது. 'மாம்ச இச்சை' இது ஏவாளின் பாவத்தின் இரண்டாம் பரிமாணம்.

இச்சையடக்கமுள்ளவர்களாயிருங்கள். மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள். உங்கள் மாம்சத்தை தீனிபோட்டு வளர்க்காதீர்கள். அப்போஸ்தலனாகிய பவுலைப் போல சரீரத்தைக் கீழ்ப்படுத்தி அடக்குங்கள்.

யாக்கோபின் குமாரனாகிய ரூபனைப் பாருங்கள். (Iநாளாகமம் 5:1,2) தன் தகப்பனுடைய மஞ்சத்தைத் தீட்டுப்படுத்தினபடியால் கோத்திரத்து அட்டவணையிலே அவன் முதல் பிறந்தவனாக எண்ணப்படாமல், அவனுடைய சேஷ்டபுத்திர சுதந்திரம் இஸ்ரவேலின் குமாரனாகிய யோசேப்பின் குமாரருக்குக் கொடுக்கப்பட்டது. யூதாதன் சகோதரரில் பலத்ததினால் ராஜாதிபத்தியம் அவன் சந்ததியில் உண்டானது.

பார்த்தீர்களா! மாம்ச இச்சையில் விழுந்துபோன ரூபன் சேஷ்டபுத்திர பாகத்தையும் ராஜாதிபத்தியத்தையும் ஒன்று சேர இழந்து போனான். தேவபிள்ளையே நீங்கள் யார் தெரியுமா? நீங்கள் முதற்பலன்கள் இந்த உலகை ஆளப்போகிற இராஜாக்கள். ஆதாம் ஏவாளை ஆளச் செய்தார். அவர்களோ மாம்ச இச்சையில் ஆளுகையை இழந்தார்கள். மாம்ச இச்சைக்கு விலகியிருங்கள், அல்லாவிடில் முதற்பலனையும் ராஜாதிபத்தியத்தையும் ஒன்று சேர இழக்க நேரிடும்.

சாத்தானின் சொல் கேட்ட ஏவாள் 'புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க கனி' என்று சொன்னதைக் கவனியுங்கள். இவர்கள் புத்தி ஏன் தெளிய வேண்டும். ஏற்கனவே இவர்கள் தேவ சாயலினால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் தெளிந்த புத்தியுடைவர்கள். பின்னே ஏன் புத்தியைத் தெளிவிக்க விரும்பினார்கள். வீணான பெருமையைத் தேடினார்களே தவிர வேறொன்றுமல்ல. 'ஜீவனத்தின் பெருமை'. இதுவே இவர்களின் விழுகைக்கு மூன்றாவது பரிமாணம்.

கவனமாயிருங்கள். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். நேபுகாத் நேச்சார் பலப்பட்ட போது 'என் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரஸ்தாபத்திற்கென்று நான் கட்டின மகாபாபிலோன்' என்று சுயப் பெருமையில் சுலோகம் பாடினான். சுருக்கு கழுத்தில் விழுந்தது. பாவம்! ஆட்சியை இழந்துபோனான்.



கழுதைக்குப் பின்னே போன சவுலை தேவன் ராஜாவாக்கினார். அவனோ கர்மேலில் தனக்கு ஒரு ஜெயஸ்தம்பம் நாட்டினான். அந்தோ தகர்ந்தது அவன் ராஜ்யபாரம். எவர் மறுதலித்தாலும் நான் மறுதலிக்க மாட்டேன் என்று உறுமினான் பேதுரு. ஐயகோ! உடைந்தது அவன் உறுதிமொழி ஒரு சில நாளிலே.

I யோவான் 2:16 ஐ வாசித்துப் பாருங்கள். மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்தில் உள்ளவைகளெல்லாம் பிதாவினுடையவைகள் அல்ல என்று எழுதியிருக்கிறது. குற்றம் இல்லாத இந்த ஏவாள் இம் மூன்றிலே விழுந்து போனாள்.

இவள் விழுகைக்குக் காரணம், ஏவாள் புருஷனோடு இசைந்து வேலை செய்யவில்லை. ஐக்கியம் பிசாசோடு. தேவையில்லாத பேச்சு கவனமாயிருங்கள். கருத்தாய் இருங்கள்.

இந்தக் குற்றமில்லாமையின் யுகத்தின் சோதனையில் மனுஷன் தோற்றுப்போனான். தோற்றுப்போன அவர்கள் தேவ சாபத்திற்கு ஆளானார்கள். தேவனுடைய சாபம் 5 விதமாக (படிகள்) வெளிப்பட்டது.

**முதலாவது சர்ப்பத்தின் மேல்.** அதுவரைக்கும் நடந்து நலமான கனிகளைப் புசித்த சர்ப்பம் நயவஞ்சகமாய் நரரை நாசமாக்கினபடியால் நகர்ந்தே போக கால்கள் செயலற்றுப் போனது. நாவுக்கு ருசியான கனிகளுக்குப் பதிலாய் உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணே ஆகாரமாயிற்று. (ஆதி 3:14) **அடுத்து சாத்தானுக்கு** சாபம் அவர் உன் தலையை நசுக்குவார் (ஆதி 3:15) என்று கிறிஸ்துவை குறித்து சொன்னார்.

**அடுத்து** சர்ப்பத்தின் வார்த்தைக்கு செவி கொடுத்து ஆதாமையும் கெடுத்த **ஸ்திரீயை தேவன் சபித்தார்.**

அன்று முதல் ஸ்திரீயின் மேல் கர்ப்ப வேதனை சுமத்தப்பட்டது. அவன் உன்னை ஆண்டு கொள்வான் என்று புருஷனின் ஆதிக்கம் மனைவியின் மேல் தேவனால் சுமத்தப்பட்டது. மனைவிகளே உங்கள் புருஷன் உங்களை ஆண்டு கொள்வது தேவனால் பிறப்பிக்கப்பட்ட ஆணை (ஆதி 3:16) பரலோகம் போகும் வரை இதை யாரும் மாற்ற முடியாது.

**அடுத்து** மனைவியின் வார்த்தைக்கு செவி கொடுத்து மகேசனின் வார்த்தையை தள்ளிப்போட்ட **ஆதாமுக்கு சாபம்.** வருத்தத்தோடு அதன் பலனைப் புசிப்பாய், நீ வேர்வையினால் ஆகாரம் புசிப்பாய் (ஆதி 3:17,19). **அடுத்த சாபம் ஆதாமின் கால்பட்ட பூமி** முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும் (ஆதி 3:18)

மகிமையாய்த் துவங்கின குற்றமில்லாமையின் யுகத்தில் சோதனையில் மனிதன் தோற்றதினால் சாபத்தை வாங்கிக் கொண்டது மாத்திரமல்ல. ஏதேனை விட்டே துரத்தி விட்டார். குற்றமில்லாமையின் யுகம் தோல்வியில் முடிந்தது.

ஆகிலும் கிருபையுள்ள தேவன் நிர்வாணிகளாய் இருந்த அவர்களுக்கு வஸ்திரத்தைக் கொடுத்து ஒரு வாக்குத்தத்தையும் கொடுத்தார். ஸ்திரீயின் வித்து பிறப்பார். சாத்தானின் தலையை நசுக்குவார். கண்ணீரோடும், அழுகையோடும் குற்றமில்லாமையின் யுகத்தை விட்டு கர்த்தரின் சமூகத்திலிருந்து குற்றவாளிகளாய் வெளியேறினார்கள். மீண்டும் இவர்களை மீட்க ஒரு சோதனைக்காலம் தொடர்ந்து வந்தது. அதுதான் மனச் சாட்சியின் யுகம்.

# 4 மனச்சாட்சியின் யுகம்

ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேறின ஆதாமும் ஏவாளும் ஒரு புதிய சகாப்தத்துக்குள் நுழைகின்றனர். இந்த யுகத்தின் ஆரம்பத்தைப் பாருங்கள். துவக்கத்திலிருந்த ஆதாமும் ஏவாளும் தேவனைக் குறித்தும் தேவனுடைய மகிமையைக் குறித்தும் மிகத் தெளிவாக அறிந்திருந்தனர். இது ஒரு புறம் இருக்க, ஏற்கனவே தேவ சோதனையில் இவர்கள் தோற்றுப் போனவர்கள். அது மட்டுமல்லாமல், நன்மை தீமை அறியத்தக்க கனியை புசித்தபடியினால் அவர்கள் அகக்கண்ணும் புறக்கண்ணும் திறந்து கொண்டது. ஆகவே மனச்சாட்சி செயல்படும் விதத்தில் இந்த யுகத்தைத் துவக்கினார்கள்.

நிர்வாணிகளாய் இருந்த இவர்களை நிராயுதபாணிகளாய் தேவன் அனுப்ப விரும்பாமல் அருமையான தோலுடையையும், அற்புதமான மேசியாவைக் குறித்த வாக்குத்தத்தையும் கொடுத்தனுப்பினார். முதன் முதல் ஆபரேஷன் செய்த டாக்டர் ஏதேனில் பிதா என்பார்கள் சிலர். ஆனால் இங்கு முதல் முதல் உடை உண்டு பண்ணின டெய்லரும் ஆண்டவரே என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவர்களுடைய மனசாட்சி வேலை செய்தது. மனசாட்சியில் ஏவப்பட்டு காணிக்கைகளைக் கொண்டு வந்தார்கள். ஆதாமுக்கு ஏனோஸ் என்னும் பேரன் பிறந்த போது மக்கள் தேவனைத் தொழுகிற அனுபவத்தில் தீவிரமடைந்திருந்தார்கள்.

இந்த யுகத்திற்கு சோதனைக்கான பிரத்தியேகமான பிரமாணங்கள் எதையும் தேவன் வழங்கவில்லை. இந்த யுகத்திற்கு இடப்பட்ட பெயரின்படியே மனிதருடைய மனசாட்சியே அவர்களை சோதிக்கும் ஆயுதமாக இருந்தது.

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பிள்ளைகள் பிறந்தார்கள். ஆதாம் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான். ஆனால் அவன் பிள்ளைகளோ தேவ சாயலில் அல்ல, மகிமை இழந்த

ஆதாமின் சாயலில் பிறந்தார்கள். ஆதாமுக்கு 30 ஆண் மக்களும், 30 பெண்மக்களும் பிறந்திருக்கலாம் என்று மிகச் சிறந்த வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

'முதல் கோணல் முற்றும் கோணல்' என்பது போல இந்த யுகத்தின் துவக்கத் தம்பதிகளான ஆதாம் ஏவாளே தோல்வியடைந்தவர்களான படியால் தொடர்ந்து வந்தவர்களும் மனசாட்சியைத் தோண்டிப் புதைத்து விட்டார்கள்.

முதல் தம்பதிகளுக்குப் பிறந்த முதல் மகன் மனுஷ கொலை பாதகனானான். காயின் ஆபேலைக் கொலை செய்தான். இருவரும் தங்கள் பெற்றோரினால், தேவனுக்கடுத்த காரியங்களில் போதிக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால் தான் அவர்கள் ஆர்வத்தோடு பலி (காணிக்கை) செலுத்தியிருக்கிறார்கள்.

ஆபேலை அங்கீகரித்து காயீனை நிராகரித்ததற்குக் காரணம் பொருட்களின் மேன்மையினால் அல்ல, கொண்டு போன நோக்கம் தான். எபிரெயர் 11:4இல் விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்கு செலுத்தினான். அதனாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான் என்று எழுதப்பட்டுள்ளது.

ஆபேலுடைய பலி வெறும் காணிக்கை மாத்திரமல்ல. பாவ நிவாரண பலியையும் உள்ளடக்கியது. காயீன் பலி செலுத்தினான். ஆனால் அதில் பாவ நிவர்த்திக்குண்டானவைகள் ஏதுமில்லை. ஆண்டவர் அதை "பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும்" என்று ஞாபகப்படுத்துகிறார். (பாவம் என்பது பாவ நிவாரணம் இவ்விரண்டிற்கும் ஒரே வார்த்தையை மூலபாஷையில் பயன்படுத்தியிருக்கிறார்கள்.)

ஆனால் அவனோ தேவனுடைய ஆலோசனைக்குக் கீழ்ப்படியாமல் ஆபேலுக்கு விரோதமாக எழும்பி கொலை செய்தான். இவனே உலகத்தின் முதல் கொலைக்காரன். ஆகிலும் தேவன் ஆதாமைப் பார்த்து எங்கே இருக்கிறாய்? என்று கேட்டது போலவே காயீனையும் பார்த்து உன்



சகோதரனாகிய ஆபேல் எங்கே? என்றார். அப்பொழுதும் அவன் மனசாட்சி வேலை செய்யவில்லை. நான் அறியேன் என்று சாக்கு போக்கு சொல்லிவிட்டான்.

பிரியமானவர்களே! மனசாட்சியை வளர விடுங்கள். வாழ விடுங்கள். இந்த யுகத்தின் இரண்டாம் முக்கியப் புள்ளியும் மனசாட்சியில் மடிந்து போனான்.

ஆதாமுக்கு காயீன் மூலம் ஒரு சந்ததியும் சேத்தின் மூலம் ஒரு சந்ததியும் மற்ற குமாரர்கள் மூலம் பல சந்ததியும் பூமியில் பெருக்கெடுத்தது. ஆதாமுக்கு ஏழாந்தலை முறையான (காயீன் சந்ததியில்) லாமேக்கு இரண்டு மனைவிகளைக் கட்டி தேவனுடைய பிரமாணத்தை உடைத்துப்போட்டதும் அல்லாமல் அவனும் ஒரு வாலிபனைக் கொலை செய்து விழுந்து போனான் (ஆதி 4:23).

ஆதாமின் குமாரனாகிய சேத் சந்ததியும் தொடர்ந்து விழுந்து போனார்கள். இச்சந்ததியில் ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கு (சேத் சந்ததியில்) தேவனோடு உறவாடும் போது எடுத்துக்கொள்ளப்பட்டான். அவபக்தியுள்ளவர்களைக் கண்டிக்க தேவன் வருகிறார் என்று அக்காலத்திலேயே அவன் தீர்க்கதரிசனம் உரைத்தான் (யூதா 14,15)

ஆகிலும் அனைவருமே விழுந்து போனார்கள். எனவே தேவன் விழுந்து போன மனுக்குலத்தின் மேல் நியாயத் தீர்ப்பைக் கொண்டு வந்தார். அத்தலைமுறையிலிருந்த நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. நோவாவுக்கு தேவன் வெளிப்படுத்தினபோது அவனும் மக்களை எச்சரித்தான் (II பேதுரு 2:5) ஆகிலும் மக்கள் மீளவில்லை.

தேவனுடைய வார்த்தையின்படி நோவா பேழையை உண்டுபண்ணி அவனும் அவன் குடும்பத்தார் எட்டு பேரும் பிரவேசித்தார்கள். அவனோடு கூட சுத்தமான மிருக ஜீவன்களிலும் பறவைகளிலும் எவ்வேழு ஜோடிகளும், அசுத்தமில்லாதவைகள் ஒவ்வொரு ஜோடியும் பிரவேசித்தன.

அதன்பின் தேவன் வெள்ளத்தினால் இந்த பூமியை அழித்தார். மாம்ச ஜந்துக்களாகிய பறவைகளும் நாட்டு மிருகங்களும் எல்லா நர ஜீவன்களும் பூமியின் மேல் சஞ்சரிக்கிற யாவும் மாண்டு போயின. நோவாவும் அவன் வீட்டாரும் அவனோடு பேழைக்குள் பிரவேசித்த மிருக ஜீவன்களும் பேழையினால் பத்திரமாக காக்கப்பட்டனர்.

தேவபிள்ளையே! இப்படித்தான் இந்த உலகத்துக்கு ஒரு நாள் தேவ கோபம் இறங்கி வரப்போகிறது. பேழைக்குள் பிரவேசித்தவர்கள் மாத்திரம் காக்கப்படுவார்கள். அந்தப் பேழை கிறிஸ்து இயேசுவே, நீங்களும் உங்கள் வீட்டாரும் தீவிரமாய் அதன் உள்ளே பிரவேசியுங்கள். அப்பொழுது இரட்சண்ணியத்தை அனுபவிப்பீர்கள்.

**தண்டனைக்கடுத்த கிருபை :**

தேவன் நோவாவையும் அவனுடனே பேழையிலிருந்த அனைத்தையும் நினைத்தருளினார் (ஆதி 8:1) மழை நின்றது. ஜலம் வடிந்தது. பேழை அர்மீனியாவில் உள்ள அரராத் என்னும் மலையின் மேல் (ஆதி 8:4) தங்கிற்று தேவகட்டளையின்படி இந்தப் பூமியில் மீண்டும் இறங்கி வந்தார்கள். (ஆதி 8:18) மனசாட்சியின் யுகம் முடிந்தது. தேவன் நோவாவோடு புதிய உடன்படிக்கை பண்ணினார். அன்றுமுதல் மனித அரசாட்சியின் யுகம் துவங்கியது.

ஏதேனிலிருந்து ஆதாம் வெளியேறினது முதல் நோவா பேழையை விட்டு வெளியேறினது வரை உள்ள நாட்கள் மனசாட்சியின் யுகம் ஆகும். காலக்கணக்கின்படி ஏறக்குறைய 1656 ஆண்டுகள் ஆகும். இதுவரை கவனித்த 2 யுகங்கள் சேர்ந்து பிரளயத்திற்கு முந்தின காலம் எனப்படும். பிரளயத்திற்கு முந்தின காலத்தில் ஏனோக்கு உயிரோடு எடுத்துக் கொள்ளப்பட்டார். நோவாவின் குடும்பத்தாராகிய எட்டுப்பேர் பேழையினால் காக்கப்பட்டார்கள்.

# 5 மனித அரசாட்சியின் யுகம்

ஏதேன் தோட்டத்திற்கு வெளியே வந்த இரண்டு பேரைக் கொண்டு மனசாட்சியின் யுகம் துவக்கப்பட்டது போலவே பேழையை விட்டு வந்த எட்டு பேரைக் கொண்டு மனித அரசாட்சியின் யுகம் துவங்கினது.

நோவாவும் அவன் குமாரரும் நோவாவின் மனைவியும் அவன் குமாரரின் மனைவியரும் தேவனை அறிந்தவர்கள் தேவனுடைய நியாயத் தீர்ப்பை அறிந்தவர்கள் இத்தனை தெய்வீக அனுபவம் கொண்ட இவர்கள் பேழையை விட்டு இறங்கினவுடன் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, பறவைகளையும், மிருகங்களையும் பலியிட்டார்கள். தேவன் அதனை சுகந்த வாசனையாக முகர்ந்தார். தேவன் அவர்களோடு வாய்மொழியாக பத்துவிதமான உடன்படிக்கை செய்தார். இது நோவாவின் உடன்படிக்கை எனப்படும்.

பலியின் போது கொல்லப்பட்ட மிருகத்தின் இனம் அழிந்து போயிருக்குமே என்ற கேள்வி, உங்களுக்கு எழலாம். எல்லா மிருகங்களிலும் ஒவ்வொரு ஜோடு பேழைக்குள் பிரவேசிக்கும்படி ஆண்டவர் சொன்னாலும் சுத்தமான மிருகஜீவன்களிலும் பறவைகளிலும் எவ்வேழு ஜோடிகளை (ஆதி 7:2) உள்ளே பிரவேசிக்கச் செய்தார். எனவே அந்த எவ்வேழு ஜோடிகளில் சிலவற்றைத்தான் நோவா பலி செலுத்தினான்.

1. பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள். 2. சகலத்தையும் ஆண்டு கொள்ளுங்கள். 3. மாம்ச உணவை புசிக்கலாம். 4. இரத்தத்தைப் புசியாதே. 5. உயிராயிருக்கிற இரத்தத்திற்காய் பழி வாங்குவேன். 6. கொலைக்கு கொலை. 7. கொலை செய்யாதே 8. உடன்படிக்கையைக் காத்துக்கொள். 9. இனி ஜலத்தினால் பூமியை அழிப்பதில்லை. 10. உன்னோடு நான் செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாய் வானவில்லை ஏற்படுத்துகிறேன். (ஆதியாகமம் 9:1 முதல் 16 வரை)

இந்தப் பத்து அம்சங்கள், உடன்படிக்கையை மாத்திரமல்ல, இவற்றில் பல சமுதாயப் பிரமாணங்கள், சில ஆவிக்குரிய பிரமாணங்கள். இந்த யுகத்தில் மனிதனை

சோதித்தறிய இந்த சமுதாயப் பிரமாணங்களையே சோதனை ஆயுதமாக வைத்தார். இந்த சமுதாயப் பிரமாணங்களுக்குள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொண்டு வாழ நெறிமுறை மனுவர்க்கத்திற்கு உண்டான படியால் இது மனித அரசாட்சியின் யுகம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த யுகத்தினுடைய ஆரம்பக் கர்த்தாக்கள் நான்கு பேர். நோவாவும் அவன் குமாரராகிய சேம், காம், யாப்பேத் ஆகிய ஆண்களே. இந்த மூவரில் சேமுடைய பெயர் முதலில் எழுதப்பட்டு இருந்தாலும் யாப்பேத்தே மூத்த மகன் (வாசித்துப் பார்க்கவும் ஆதி 10:21) இந்த நால்வரைக் கொண்டு தான் பூமியில் ஜனத்திரள் பெருகிற்று.

பிற்காலத்தில் (பாபேல் சிதறலுக்குப் பிறகு) காமுடைய வழித்தோன்றலாக எத்தியோப்பியர். கானானியரும்; சேமுடைய வழித்தோன்றலாக பெர்சியர், அசீரியர், கல்தேயர், சீரியர், அர்மீனியர் ஆகியோரும், யாப்பேத்தினுடைய வழித்தோன்றலாக பிரிட்டன், ஜெர்மன், கிரீக், ரோமர், ருஷ்யர் ஆகிய வம்சத்தாரும் பெருகினர்.

இந்த யுகத்தின் ஆரம்பத்தில் மக்கள் திறமையுள்ளவராக இருந்தனர். நோவா பயிரிடுகிறவனாகி திராட்சத் தோட்டத்தை நட்டான். ஜலப்பிரளயத்திற்குப் பிறகு இயற்கையில் மாபெரும் மாறுதல் ஏற்பட்டது. கோடைக்காலம், மாரிகாலம், சீதளமும், உஷ்ணமும் (ஆதி 8:22) உண்டாயின. பிரளயத்தின் போது வானத்திலிருந்த ஜலத்திரை மழை நீராய் பொழிந்ததினால் பூமியின் மேல் சூரியனின் வெப்பத்தாக்கு கூடியது. இதை சரி செய்யவே தேவன், மனித உணவில் மாற்றத்தை ஏற்படுத்தினார்.

இந்த யுகத்தின் ஆரம்பத்தில் இவர்கள் தேவ பக்தி உடையவர்களாக இருந்தாலும் அவர்களுக்கென்று அருளப்பட்ட சமுதாயப் பிரமாணத்தை ஆரம்பக் கர்த்தாக்களே மீறினார்கள். நீதிமானும் உத்தமனுமாகிய நோவாவே முதல் விழுகைக்கு ஆளானார்கள். (ஆதி 9:21) திராட்ச ரசத்தைக் குடித்து வெறித்து தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான். இழிவான மதுபானப் போதை இவனை விழத் தள்ளியது.

இந்தக் காட்சியைக் கண்ட நோவாவின் குமாரனாகிய



காம் தன் சகோதரரிடத்தில் இதைச் சொல்ல சேம், யாப்பேத் இருவரும் பின்பக்கமாக நடந்து வந்து வஸ்திரத்தினால் தகப்பனை மூடினார்கள். நோவா போதை தெளிந்து எழுந்து நடந்தவற்றை அறிந்து காமை சபித்தான். சேமையும் யாப்பேத்தையும் ஆசீர்வதித்தான்.

நோவா காமுக்கு இட்ட சாபம் அப்படியே பலித்தது. தன் சகோதரரின் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்ற வார்த்தையின்படி சபிக்கப்பட்ட காம் கானான் வம்சத்திற்கு தகப்பனானான்.

காம் சாபத்திற்குள்ளானதற்குக் காரணம் என்ன? தன் தகப்பனின் நிர்வாணத்தைக் கண்ட அவன் தானே மூடியிருக்கலாம். ஆனால் சகோதரரிடத்தில் அதைப்போய் சொன்னான். சகோதரரோ வஸ்திரத்தால் மறைத்தனர். தூற்றினவன் தூக்கி எறியப்பட்டான். மறைத்தவர்கள் மாட்சிமை பெற்றார்கள்.

தேவ பிள்ளையே! நீ பிறர் குறைகளைத் தூற்றித்திரிவாயானால் தேவ சாபத்தை வாங்கிக்கொள்வாய். பிறர் குற்றத்தை மூடி மறைத்து அவர்களை உயிர்பெறச் செய்வாயானால் தேவன் உன்மேல் பிரியமாயிருப்பார்.

இந்த மூன்று குமாரர்கள் மூலம் உண்டான சந்ததி பூமியெங்கும் பரவினாலும் ஒரே விதமான பாஷையும் ஒரே விதமான பேச்சும் இருந்தது. அதனால் அவர்களுக்கு ஒரு புதுவிதமான எண்ணம் தோன்றியது. தேவன் பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள் என்றார். இவர்களோ நாம் சிதறிப் போகாதபடி நமக்கு ஒரு நகரத்தையும் கோபுரத்தையும் கட்டுவோம் என்றார்கள். அதுவும் கர்த்தரை பிரஸ்தாபப்படுத்த அல்ல. நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் (ஆதி 11:45) என்று சொல்லித் திட்டமிட்டார்கள்.

நடந்தது என்ன தெரியுமா? இந்த நகரத்தைப் பார்க்க தேவன் இறங்கினார். இவர்கள் பாஷையைத் தாறுமாறாக்கினார். அவ்வளவு தான் இதுவரை சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவர்களின் மத்தியில் படுகுழப்பம் ஏற்பட்டு விட்டது.

ஒருவன் பக்கத்தில் இருப்பவனைப் பார்த்து 'கியா'?

என்றான். அதற்கு அவன் (வாட்) என்றான். இந்த இருவரைப் பார்த்த மூன்றாமவன், 'ஏமி' என்றான். நாலாமவன் 'குச்' என்றான். ஒருவன் பேசியது மற்றவனுக்கு புரியவில்லை. அன்றைக்கு பாஷைகள் பிரிந்தது.

பாஷைகளின்படியே ஜனக்கூட்டங்கள் பிரிந்தது. மக்கள் சிதறினதால் கோபுரம் கட்டுவது நின்றது. பாஷைகள் தாறுமாறானபடியால் 'தாறுமாறு' என்று அர்த்தங்கொள்ளும் விதத்தில் அவ்விடத்திற்கு பாபேல் என்று வழங்கப்பட்டது. இந்த பாபேல் என்னும் இடத்தில்தான் நேபுகாத் நேச்சாரால் பிற்காலத்தில் பாபிலோன் கட்டப்பட்டது.

மனசாட்சி யுகத்தில் கீழ்படியாதவர்களை பிரளயத்தினால் சங்காரம் பண்ணினவர் மனித அரசாட்சியின் யுகத்தில் கீழ்ப்படியாத மனுக்குலத்தை பாஷைகளை தாறுமாறாக்கி சிதறப் பண்ணினார். இதுவே இவர்களுக்கு உண்டான நியாயத் தீர்ப்பு. அப்பொழுதுதான் சர்வ ஜனங்களின் எல்லைகள் திட்டமிடப்பட்டது. (ஆதி 10:25, உபாகமம் 32:8)

தேவன் நியாயத் தீர்ப்பை உண்டாக்கினாலும் தம்முடைய மகிமையின் ராஜ்யத்திற்கென்று மனுக்குலத்தை வாழ்வளிக்க விரும்பினதினால் சேமின் வம்சத்தின் வழி வந்தவர்களும் கல்தேயப் பட்டணத்தைச் சார்ந்த தேராகின் குமாரனாகிய ஆபிரகாமை 'நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்' என்று வாக்குத்தத்தத்தினால் அழைத்தார். அன்று முதல், மனித அரசாட்சியின் யுகம் முடிந்து வாக்குத்தத்த யுகம் ஆரம்பமானது.

நோவா பேழையை விட்டுவெளியேறினதிலிருந்து ஆபிரகாம் ஆரானைவிட்டுப் புறப்பட்டது வரை உள்ள நாட்கள் மனித அரசாட்சியின் யுகம் என்று சொல்லப்படும். வேதாகம சரித்திரக் கணக்கின்படி இஃது 427 வருடம். முழுமனுக்குலமும் தேவனை விட்டு சோரம் போய் விக்கிரகத்திலே மூழ்கிப்போன போது உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன் என்று அழைத்து புதிய வழிக்குள் தேவன் நடத்தினார். அதிலேயும் தேவன் சோதனையை வைத்திருந்தார். அந்த யுகம் வாக்குத்தத்த யுகம் எனப்படும்.

# 6 வாக்குத்தத்தத்தின் யுகம்

பூமியில் வம்சங்கள் பெருகி மொழிகள் பிரிந்த நிலையில் தேவனை மறந்து விக்கிரகங்களைத் தொடர்ந்து போன மக்கள் கூட்டத்திலிருந்து ஒரு குடும்பத்தை தேவன் கண்டார். தேவனுடைய அழைப்பு 'தேராகு' க்குள்ளேயே (ஆபிரகாமின் தகப்பன்) ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். கானான் தேசத்திற்குப் போக ஊர் என்னும் இடத்தைவிட்டு தேராகு புறப்பட்டு ஆரான் என்னும் இடமட்டும் வந்து அங்கே தங்கி விட்டான். கடைசியில் அவன் கானானுக்குள் போகாமல் ஆரானிலே மரித்து விட்டான்.

தேராகு என்றால் தாமதம் என்று அர்த்தமாம். தேராகுக்குள் அழைப்பு இருந்தது. அழைப்புக்குக் கீழ்ப்படிய சம்மதம் இருந்தது. கூடவே தாமதம் இருந்தது. அதனால் அழைப்பின் பலனை அடையவில்லை. கர்த்தர் உங்களையும் ஊழியத்திற்கோ அல்லது வேறு காரியத்திற்கோ திட்டமாய் அழைத்திருக்கலாம். அழைப்பைக் குறித்து அசதியாய் இருந்து தாமதிக்காதீர்கள். உங்கள் மேலான பாக்கியங்களை இழந்து போவீர்கள்.

இந்த யுகத்தின் ஆரம்பத்தைப் பாருங்கள். தேவன் ஆபிரகாமோடு தமது வாக்குத் தத்தமாகிய உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார்.

1. உன் தேசத்தை விட்டுவிடு.
2. உன் இனத்தை விட்டுவிடு.
3. உன் வீட்டை விட்டுவிடு.
4. உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப்போ.
5. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்.
6. உன்னை ஆசீர்வதிப்பேன் ஆசீர்வாதமாய் இருப்பாய்.
7. உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்.
8. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்.
9. உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன்.
10. பூமியின் வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.

இந்தப் பத்து அம்சங்களே (ஆதி 12:1 முதல் 3) தேவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கை. முன்பின் தெரியாத கானானை நோக்கி 75 வயதில் தன் மனைவியாகிய சாராளோடும், தன் சகோதரன் நாகோருடைய குமாரன் லோத்தோடும் கானானுக்குப் புறப்பட்டுப் போனான். இதுவே வாக்குத்தத்த யுகத்தின் துவக்கம்.

கீழ்ப்படிதலோடு புறப்பட்ட ஆபிரகாம் தேவபக்தி நிறைந்தவனாய் கானான் தேசத்தில் பலிபீடத்தைக் கட்டி கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவனாய் இருந்தான். விசுவாசமுள்ளவனாக மாத்திரமல்ல, வீரம் நிறைந்தவனாக இருந்தான். லோத்துவைப் பகையாளிகள் தூக்கிக் கொண்டு போன போதுதானே தலைமை தாங்கி யுத்தம் செய்து லோத்துவையும் அவனுக்குண்டானவைகளையும் மீட்டுக் கொண்டு வந்தான். (ஆதியாகமம் 14:14,16)

தேவனுக்குப் பயப்படுகிற ஆபிரகாம் கொடுப்பதில் உத்தமனாய் இருந்தான். ஆசாரியனாகிய மெல்கிசேதேக்குக்கு எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். இந்த சூழ்நிலையை திருஷ்டாந்தமாக விளக்க விரும்புகிறேன். ஆசாரியன் ஆபிரகாமிற்கு அப்பமும் திராட்சரசமும் கொடுத்தான். ஆபிரகாம் அவனுக்கே தசம பாகம் கொடுத்தான். நீங்களும் அப்படியே உங்களுக்கு அப்பமும் திராட்ச ரசமும் கொடுக்கின்ற (திருவிருந்து) ஆசாரியரிடத்தில் தசம பாகத்தைக் கொடுங்கள், அதே சமயம் உங்கள் காணிக்கைகளினால் மற்ற ஊழியங்களைத் தாங்குங்கள்.

ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கு தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி பிறந்தவன். அவன் பிறப்பதற்கு முன்பே பெயரிடப்பட்டவன். இவனிடத்திலே கர்த்தருடைய சந்ததி விளங்கும் என்று வாக்கு செய்யப்பட்டுள்ளது.

ஆபிரகாமிற்கு பிள்ளைகளைக் குறித்து தேவன் வாக்குத்தத்தம் கொடுத்திருந்தார். ஆதியாகமம் 22:17ல் உன் சந்ததியை வானத்து நட்சத்திரம் போலவும், கடற்கரை



மணலைப் போலவும், பூமியின் தூளைப் போலவும் பெருகப்பண்ணுவேன் என்றார். அப்படியே ஈசாக்கின் மூலமாய் வானத்து நட்சத்திரங்களைப் போன்ற சந்ததியையும், ஆகார் மூலமாய் பிறந்த இஸ்மவேல் மூலமாய் கடற்கரை மணலத்தனையான சந்ததியும் தோன்றினர். ஆபிரகாமுக்கு கேத்தூராள் என்னும் மூன்றாவது மனைவி இருந்தாள் (ஆதி 25:1) அவர்கள் மூலமாய் பூமியின் தூளைப்போல் சந்ததி பெருகிற்று.

ஆபிரகாம் ஒருமுறை தேவனுடைய வார்த்தையின்படி பலிகொண்டு போனான். (ஆதி 15:10) பலியைக் கீழ்ப்படிதலோடு செலுத்தினாலும் பட்சிகளை அவன் துண்டிக்கவில்லை. பலியின் பிரமாணத்தின்படி பட்சிகள் துண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். இப்பொழுதோ அயர்ந்த நித்திரையில் ஆபிரகாம் தூங்கிப்போகிறான். தேவன் அவனோடு உன் சந்ததி அந்நிய தேசத்தில் 400 வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்று இஸ்ரவேலரின் எகிப்தின் அடிமை வாழ்க்கையை தீர்க்க தரிசனமாக உரைத்தார்.

தேவன் இப்படி அடிமைத்தனத்திற்கு ஒப்புக் கொடுத்ததிற்கு காரணம் என்னவென்று தெரியவில்லை. "பிதாக்களின் அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை வரை விசாரிக்கிறவர்" என்று ஆண்டவரைக் குறித்து யாத் 20:3, 34:7 ஆகிய வசனங்கள் கூறுகிறது.

எனவே பிதாவாகிய ஆபிரகாம் பலியின் பிரமாணத்தை மீறி பட்சிகளைத் துண்டிக்காத படியால் ஆண்டவர் கோபப்பட்டு தண்டனை வழங்கியிருக்கலாம். அதனால் தான் பலியின் மேல் பட்சிக்கும் அக்கினி இறங்காமல், பட்சிகள் இறங்கியது என்று நினைக்கிறேன். ஆதி (15:1)

பெற்றோர்களே! உங்கள் அரை குறையான கீழ்ப்படிதல் உங்கள் பிள்ளைகளுக்கு சாபத்தைக் கொண்டுவரும். மறந்து விடாதீர்கள்.

ஈசாக்குக்கு ஏசா, யாக்கோபு என்ற இருவர் பிறக்கின்றனர். காலப்போக்கில் ஏசா நிராகரிக்கப்பட்ட

இஸ்மவேலோடு இணைகிறான். யாக்கோபோ பூரண சுதந்தர வாளியாகிறான். யாக்கோபுக்கு 12 குமாரரும் 1 குமாரத்தியும் பிறக்கிறார்கள். சகோதரரால் விற்கப்பட்ட யோசேப்பு எகிப்தின் அதிபதியாகிறான். பஞ்ச காலத்தில் அவன் அழைப்பின் பேரில் யாக்கோபும் அவன் குடும்பத்தாரும் கானானை விட்டு இடம் பெயர்ந்து எகிப்திலே குடியேறினார்கள்.

இந்த யுகத்தின் சுருக்கத்தில் காணத்தவறின ஒன்றை தியானம் பண்ணப்போகிறோம். மற்ற யுகங்களைப் போலவே வாக்குத்தத்தத்தின் யுகத்திலிருந்த முக்கியஸ்தர்கள் தோல்வியே கண்டார்கள். தெளிவான அழைப்பைப் பெற்றிருந்த ஆபிரகாம் கானானில் கால் வைத்த பின்பு பஞ்சம் ஏற்பட்டபடியால் (ஆதி 12:10) எகிப்துக்கு ஓடினான். எகிப்தில் பார்வோனுக்கு பயந்து தன் மனைவியை சகோதரி என்று பொய் சொன்னான். தன் மனைவியை பொய் சொல்லவும் வைத்தான் (ஆதி12:13) சாராளின் அழகைக் கண்டு இச்சையினால் தயவு பாராட்டி பார்வோனினால் அனுப்பப்பட்டவைகளை ஆபிரகாம் பெற்றுக்கொண்டான்.

இனத்தை விட்டுவிடு என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிந்தாலும் லோத்துவை உடன் அழைத்து வந்ததனால் தேவன் அவனிடத்தில் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றத் தாமதித்தார். லோத்தும், ஆபிரகாமும் பிரிந்த பின்புதான் (ஆதி 13:14) கானானைக் குறித்த விரிவான வாக்குத்தத்தத்தை தேவன் தந்தார்.

கர்ப்பப் பிறப்பானவனே உனக்கு சுதந்திரவாளி (ஆதி 15:4) என்று ஆணித்தரமான வாக்குக் கொடுத்திருந்தாலும் அவிசுவாசப்பட்டு அவசரக்கார சாராளின் ஆலோசனையைக் கேட்டு ஆகாரை மறுமனையாக்கிக் கொண்டான். (ஆதி 16:1) கர்த்தர் சாராளினிடத்தில் பிள்ளை பிறக்கும் என்று மீண்டும் தெளிவாய் சொன்ன போது (ஆதி 17:16) இஸ்மவேல் பிழைப்பானாக என்று (ஆதி 17:18) தவறான ஜெபம் செய்தான் அதன் விளைவு இன்று வரை நடக்கும் இஸ்ரேலியர் அரபு சண்டைகள்.



விசுவாசிகளே! தேவன் ஒரு தரம் சொன்னதை இரண்டாம் விசை திருத்துகிறவரல்ல. அவர் சொன்னதை சொன்னபடி செய்வார். அவர் சொல்லிவிட்டாரே என்று குறுக்கு வழியில் ஆசீர்வாதம் தேடாதீர்கள். வீடு தருவார் என்றால் நிச்சயமாய் வீடு தருவார். லாட்டரி சீட்டு மூலமாய் வீடு தருவார் என்று லாட்டரி சீட்டு வாங்காதீர்கள். மாம்ச இச்சையினால் மருண்டு தவறான விண்ணப்பம் செய்யாதீர்கள். வாழ்நாளெல்லாம் பிரச்சனையில் தவிப்பீர்கள்.

ஆபிரகாமின் குமாரனாகிய இஸ்மவேல் பரிகாசக் காரனாய்ப் போனான். ஈசாக்கோ போஜனப் பிரியனான். கண் தெரியாக் காலத்தில் பிள்ளைகளை ஆசீர்வதிக்கும் போது ஏசாவை ஆசீர்வதித்து பின்னர் சாப்பாடு கேட்டிருக்கலாம். ஆனால் இவன் சாப்பாட்டை முதலில் கேட்டதினால் நினைத்தவனை நினைத்தபடி ஆசீர்வதிக்க முடியவில்லை.

இவன் பெற்றெடுத்த ஏசாவோ ஒரு வேளை போஜனத்திற்காக சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப் போட்டவன். இளையவனாகிய யாக்கோபோ தள்ளாத வயதில் உள்ள தகப்பனை ஏமாற்றியவன். தன்னலம் கருதாமல் தாரங்களைக் கொடுத்த தாய்மாமனை ஏமாற்றியவன். அத்தோடு நின்றானா? திரும்பி வந்தால் பெத்தேலில் பலிபீடம் என்றான். எல்லாவற்றோடு வந்த போதோ 'ஏல்எல்லாகே இஸ்ரவேல்' பலிபீடமாயிற்று. யெகோவாவையும் ஏமாற்றின மிகச்சிறந்த தந்திரவாதி.

அவன் பிள்ளைகள் யார்? சொந்த சகோதரனையே 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டவர்கள். தீனாள் என்ற ஒரே பெண் ஊர் சுற்றிப் பார்க்கப் போய் கெட்டுப் போனவள். சிமியோன், லேவி என்னும் இருவர் சீகேமின் புத்திரரை ஒரே நாளில் கொலை செய்த கொலைக்காரர்கள். (ஆதி 34:25) யாக்கோபின் முதல் குமாரனாகிய ரூபன் தன் தகப்பனின் மறுமனையாட்டியை தீட்டுப்படுத்தினவன் (ஆதி 49:3,4)

ஆக, வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததியின் முதல்

பிதாவாகிய ஆபிரகாம் முதல் மூன்றாம் பிதாவாகிய யாக்கோபு, வரையும் அவன் பெற்றெடுத்த 12 கோத்திரப் பிதாக்களும் வாக்குத்தத்தத்தை மறந்து ஒரு மவுன யுத்தத்தை தேவனுக்கு எதிரே தொடுத்தார்கள்.

தேவன் மனுக்குலத்தை மீட்க தன்னோடு அவர்களை ஒப்புரவாக்கிக் கொள்ள எத்தனையோ முறைகளை கையாண்டாலும் அத்தனையிலும் மனிதன் தோற்றுப்போனான். தேவன் இவர்களை நியாயத்தீர்ப்புக்கு ஒப்புக் கொடுத்தார். எகிப்துக்குப் போன யாக்கோபின் குடும்பத்தார் யோசேப்பு இருக்கும் வரை சுகித்துக் குடியிருந்தார்கள். யோசேப்பு மரித்தபின் வேறொரு பார்வோன் எழுந்தான். பரிதாபம், இவர்களின் வசந்தகாலம் விசன காலமாய் மாறியது. ஆண்டான் குடும்பத்தைப் போலிருந்தவர்கள் அடிமைகளானார்கள். தேவனுடைய நியாயத் தீர்ப்பு அவர்கள் மேல் கொழுந்து விட்டு எரிந்தது. அது எகிப்தின் அதிபதி பார்வோன் மூலமாகவும் அவன் ஆட்கள் மூலமாகவும் பிரதிபலித்தது.

தேவன் வெகுவாய்த் தண்டித்தாலும் மனுக்குலத்தை மீட்டுக்கொள்ள மீண்டும் கிருபை பொழிந்தார். மோசே என்னும் இரட்சகனை எழுப்பி ஒரே இராத்திரியில் அத்தனை பேரையும் இரட்சித்துக் கொண்டு வந்தார். அன்று வாக்குத்தத்தத்தின் யுகம் முடிந்து புது யுகம் பிறந்தது. அதுவே நியாயப் பிரமாண யுகம்.

ஆபிரகாம் ஆரானைவிட்டது முதல் இஸ்ரவேல் எகிப்தை விட்டுப்புறப்பட்டது வரை உள்ள காலக்கட்டம் வாக்குத்தத்த யுகம் எனப்படும்.

# 7 நியாயப் பிரமாண யுகம்

எகிப்தின் அடிமைத்தனத்தின் கீழ் இருந்த இவர்களை மோசேயின் கரத்தினால் ஒரே இரவில் எகிப்தை விட்டு தேவன் மீட்டுக் கொண்டு வந்தார். இது ‘மாபெரும் புறப்பாடு’ எனப்படும்.

இதுவரை பார்த்த யுகங்களிலேயே மிக முக்கியமான யுகம் இந்த நியாயப்பிரமாண யுகம். இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்தபோது தேவன் அவர்களை வெளியே கொண்டுவந்ததற்கு முக்கியமான நோக்கம் தன்னை ஆராதனை செய்யும் படிக்கே. இதே காரணத்தைத்தான் மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் சொன்னார்கள். கடினமனம் கொண்ட பார்வோன் அவர்களை அனுப்ப மறுத்தபோது, தேவன் பத்துவிதமான வாதைகளை எகிப்தின் மேல் அனுப்பினார்.

தேவனுடைய வாதையின் போது ஒரு முக்கியமான காரியம் நடைபெற்றது. அந்த வாதை எகிப்து தேசம் முழுவதும் வந்த போதும் எகிப்திலே குடியிருந்த இஸ்ரவேலர் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. அதைப்போலவே விரைவில் வரப்போகிற அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியில் தேவனுடைய கோபாக்கினை பூமியின் மேல் இறங்கும்போது யூதர்கள் குடியிருக்கிற பகுதிகளைப் பாதிக்காது.

இந்த யுகத்தில் நடைபெற்ற முக்கியமான சம்பவங்கள் அனைத்தும் புதிய ஏற்பாட்டு சபைக்கு தேவன் வைத்திருக்கிற காரியங்களின் நிழலாட்டமாக இருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் புறப்படுவதற்கு முன்பு மாபெரும் சங்காரம் எகிப்தில் ஏற்பட்டது. அந்த சங்காரத்தினால் இஸ்ரவேலரின் தலைப்பிள்ளைகள் யாரும் அழிவை சந்திக்க வில்லை. காரணம் தேவனுடைய நியமத்தின்படி பஸ்காவைப் புசித்தார்கள்.

பஸ்கா என்பது என்ன? ஒரு வயது பூரணமான ஆட்டுக்குட்டி ஒவ்வொரு குடும்பத்திற்காக அடிக்கப்பட்டது. அதன் இரத்தம் வாசல்களில் பூசப்பட்டது. சங்கார தூதன்

எகிப்திலே வந்தபோது இரத்தம் பூசப்பட்ட வீடுகளை சங்கரிக்காமல் தாண்டிச் சென்றான். இச்சம்பவம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகிற பாவ மன்னிப்பின் நிச்சயத்தையும், நித்திய ஜீவனின் நம்பிக்கையையும் நமக்கு நினைப்பூட்டுகிறதல்லவா?

ஒரே இரவில் அவர்கள் புறப்பட்டபோது மூன்று விதமான விடுதலையைப் பெற்றுக் கொண்டார்கள். பார்வோன் மற்றும் அவன் சேனையிடத்திலிருந்து நிரந்தர விடுதலை பெற்றுக் கொண்டார்கள். இவர்கள் புறப்படத் தயங்கின பொழுது அண்டை அயலகத்தார் தங்கள் வெள்ளியுடைமைகளையும், பொன்னுடமைகளையும், தாராளமாய் இவர்களுக்குக் கொடுத்ததினால் அடிமைகளாய் இருந்த இவர்கள் ஐசுவரியவான்களாய் புறப்பட்டார்கள். அவர்கள் புறப்பட்ட நாளில் அவர்களில் ஒருவனும் பலவீனன் இல்லை என்று (சங்கீதம் 105:37) இல் எழுதப்பட்டிருக்கிறது. உண்மையாகவே சரீரப்பாடுகளிலிருந்தும் வியாதிகளிலிருந்தும் அன்றைய தினம் அவர்கள் விடுதலை பெற்றுக்கொண்டார்கள்.

அவர்கள் ஒரே இரவில் பெருந்திரளாய் புறப்பட்ட போது அவர்களைத் தொடர்ந்து வந்த பார்வோனையும், அவன் சேனையையும் செங்கடலில் அமிழ்த்துப்போட்டார். செங்கடலில் ஓர் அற்புதம் கண்டார்கள். செங்கடலைக் கடந்து மாராவுக்கு வந்தபோது அங்கேயும் அற்புதம் கண்டார்கள்.

இந்த யுகத்தின் ஆரம்பத்தைப் பார்த்தீர்களா? எத்துணை மகிமையானது. சத்துருக்களுக்கு சங்காரம். இவர்களுக்கோ ஒவ்வொன்றிலும் மாபெரும் அற்புதம். செங்கடல் பிளந்ததிலிருந்து தேவன் இவர்களுக்கு முன்பாக இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும் பகலில் மேக ஸ்தம்பமாகவும் முன்னே நடந்தார். நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்று தேவன் வாக்குச் செய்தார்.

சீனாய் வானந்திரத்திற்கு வந்தார்கள். தேவன் இந்த யுகத்திற்கான பத்து நியாயப்பிரமாண கட்டளைகளை



அவர்களுக்குக் கொடுத்தார். மற்ற யுகங்களில் தேவனுடைய உடன்பாடு உடன்படிக்கையாகவே மட்டும் இருந்தது. ஆனால் இந்தப் பத்துக் கட்டளைகள் மாறாத பிரமாணமாக மீறக்கூடாத சட்டதிட்டமாக தேவனால் நியமிக்கப்பட்டது. இந்த பிரமாணங்களை தேவன் தாமே தமது சொந்தக் கையினால் எழுதிக்கொடுத்தார்.

மீறினவர்கள் தண்டிக்கப்படவும், கொலை செய்யப்படவும் தேவன் கடுமையான பிரமாணங்களைக் கொடுத்தார். இந்த யுகத்தின் சோதனை ஆயுதமாக தேவன் கொடுத்த பத்துக் கட்டளைகளும் மோசேயின் சமுதாயப் பிரமாணங்களுமே இவர்கள் முன் வைக்கப்பட்டிருந்தது. இந்த யுகத்தின் சம்பவங்களை சுருக்கமாக விவரிக்கிறேன்.

எகிப்திலிருந்து மோசே இவர்களை நாற்பது வருஷமாய் வனாந்திரத்திலே வழி நடத்தி வந்தார். மோசேயின் மரணத்திற்குப் பிறகு மோசேயினால் மரணத்திற்கு முன், தலைவனாக நியமிக்கப்பட்ட யோசுவா இந்த ஜனங்களைத் தொடர்ந்து நடத்தி வந்து கோத்திரங்களுக்கு ஏற்ப கானானைப் பங்கிட்டுக் கொடுத்தான்.

யோசுவாவின் காலத்திற்கு பின்பு இந்த ஜனங்களை ஆள அவ்வப்போது சில சமுதாயத் தலைவர்களை ஆண்டவர் எழுப்பி இவர்களை தலைமையேற்று நடத்தச் செய்தார். இவர்களுக்கு நியாயாதிபதிகள் என்று பேர். இவர்களில் பலர் பராக்கிரமசாலியாகவும், சிலர் தீர்க்க தரிசிகளாகவும் இருந்தனர்.

கடைசி நியாயாதிபதியாகிய சாமுவேல் தீர்க்கதரிசி காலத்தில் மக்கள் ராஜா வேண்டும் என்று கேட்டதினால் அவர்கள் விருப்பத்தின் படியும், தேவ திட்டத்தின்படியும் சவுல் ராஜாவானான். அதன்பின் தாவீது ராஜாவானான். தேவன் அவனோடு கூட ராஜ்ய பாரத்தைக் குறித்து நித்திய உடன்படிக்கை செய்தார்.

தாவீதுக்குப் பிறகு சாலோமோன் ஆட்சிக்கு வந்தான். அவன் தேவனுக்கு ஓர் அழகான ஆலயத்தைக் கட்டினான். சாலோமோனுடைய காலத்துக்குப் பிறகு தேசத்தில் குழப்பம்

ஏற்பட்டது. இஸ்ரவேலிருந்த 12 கோத்திரங்களில் யெரொபெயாமுடைய தலைமையில் இஸ்ரவேல் என்னும் பெயரில் (வடதிசை ராஜ்ஜியம்) சமாரியாவைத் தலைநகராகக் கொண்டு தனியாகப் பிரிந்தது. அதைப் போல் ரொகொபெயாம் தலைமையில் யூதாவாகிய தென்திசை ராஜ்ஜியம் எருசலேமைத் தலைநகராக் கொண்டு தனியாகப் பிரிந்தது.

தாவீதின் வம்சாவழி வந்த (யூதாவின் ராஜா) சிதேக்கியா ராஜாவின் காலத்தின் மக்கள் யாவரும் நெபுகாத் நேச்சாருடைய சேனையினால் பாபிலோனுக்கு சிறையாகக் கொண்டு போகப்பட்டனர்.

பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போன யூதர்கள் கோரேஸ் அரசனின் ஆணையின்படி பகுதி பகுதியாக யூதாவுக்குத் திரும்பினர். செருபாபேல், எஸ்றா, நெகேமியா ஆகியோர் தலைமையில் தாயகம் திரும்பினார். இத்துடன் நமது வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டு சம்பவங்கள் முடிவடைகிறது.

நமது வேதாகமத்தில் உள்ள பழைய ஏற்பாட்டுக்கும், புதிய ஏற்பாடு சரித்திரத் துவக்கத்திற்கும் இடையே ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகள் மாபெரும் முக்கிய சம்பவங்கள் நடந்தேறின. இந்தக் காலக்கட்டத்தில் பழைய ஏற்பாட்டின் அனைத்துப் புஸ்தகங்களும் கிரமமாய் தொகுக்கப்பட்டன.

பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கதரிசியாக கிறிஸ்துவின் முன்னோடிகிய யோவான் பிறந்தார். இந்த யுகத்தின் கடைசியில் மேசியா பிறந்தார். மரித்தார் அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்த்தார்.

இந்த யுகம் மகிமையாய் ஆரம்பித்து தேவன் அவர்களோடு தங்கியிருக்கிற அனுபவத்தில் கடந்துவந்தாலும் முழுமையும் தோல்வியாகவே இருந்தது. எகிப்தில் புறப்பட்ட போது தேவன் மேக, அக்கினி ஸ்தம்பங்களாகக் கூட வந்தார். வனாந்திரத்தில் ஆசாரிப்புக் கூடார வாசஸ்தலத்தில் தேவ மகிமை அவர்களோடு



தங்கியிருந்தது. கானான் தேசத்தில் துவக்கத்தில் சீலோவிலும் பின்னர் சாலொமோனின் தேவாலயத்திலும் தேவ மகிமை தங்கியிருந்தது. தேவனால் எழுதப்பட்ட பிரமாணமும் அவ்வப்போது தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் மூலம் சத்தியமும் அவர்களிடமிருந்தது.

இப்படியிருந்தும் அவர்கள் தேவனை விட்டே விலகிப் போனார்கள். வனாந்திரத்தில் ஒட்டு மொத்தமாக இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரக ஆராதனைக்காரர்களாய், வேசித்தனம் பண்ணுகிறவர்களாய். முறுமுறுக்கிறவர்களாய் மாறி ஒரு தலைமுறையே ஒட்டுமொத்தமாக அழிந்தது. தலைவனாகிய மோசேகூட கீழ்ப்படியாமையின் நிமித்தம் கானானுக்குள் பிரவேசிக்க முடியாமல் போயிற்று.

யோகவாவின் தலைமையில் அவர்கள் கானானை நோக்கி பயணம் செய்த போது எரிகோ பட்டணத்தில் தீட்டானவைகளை கவர்ச்சித்து விழுந்து போனார்கள். தேவனுடைய தீர்க்கர்கள் வேண்டாம் என்று தங்களுக்குக் கேடுண்டாக ராஜாக்களை தெரிந்து கொண்டார்கள். ஒவ்வொரு ராஜாவின் ஆட்சியின் போதும் ராஜாக்களும் குடிமக்களும் சேர்ந்தே தேவனை விட்டு சோரம் போனார்கள்.

தேவன் இவர்கள் மேல் வெடிகுண்டு சிறையிருப்புக்கு ஒப்புக் கொடுத்தாலும். சிறையிருப்பின் தேசத்தில் அவர்கள் பிரமாணத்தை மீறினார்கள். தேவன் அவர்களை திரும்ப சொந்த தேசத்தில் கொண்டு வந்த போதும் மீண்டும் சடுதியில் அவர்கள் பின்வாங்கிப் போனார்கள்.

இவர்கள் தோல்வியினுடைய உச்சக்கட்டம் தேவனின் ஒரே பேரான குமாரனாகிய மேசியாவை சிலுவையிலே அறைந்தார்கள்.

தேவன் இந்த ஜனத்தை நியாயத் தீர்ப்புக்கு ஒப்புக் கொடுத்தார். இந்த நியாயத்தீர்ப்பு இரண்டு பகுதியாக நிறைவேறிற்று. முதல் பகுதி முக்கியமானது. இஸ்ரவேலரின் பாவத்தை மாத்திரமல்ல. இந்த இகத்தோரின் முழு பாவமும் இயேசு கிறிஸ்துவின் மேல் சுமத்தப்பட்டு சிலுவைத் தண்டனையை பிதாவானவர் நிறைவேற்றினார்.

இரண்டாவது பகுதி இஸ்ரவேலர் மேல் விழுந்தது. மேசியாவாகிய கிறிஸ்துவை அவர்கள் தள்ளிவிட்டபடியினால் அவர்கள் ராஜ்ஜியமும் அவர்களை விட்டு எடுபட்டுப் போயிற்று. கி.பி.70ல் முழுவதுமாக தீத்து இராயனால் எருசலேம் அழிக்கப்பட்டது. அதன் குடிகளெல்லாம் தேசாந்திரிகளாய் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டார்கள்.

கிருபையுள்ள தேவன் நியாயத் தீர்ப்பை நிலைநாட்டினாலும் மனுக்குலத்தை மீட்க, தம்மோடு, சேர்த்துக் கொள்ள இன்னும் ஒரு தவணை கொடுத்தார். இந்த தவணைக் காலம் மிக வித்தியாசமானது. ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத் தத்த உடன்படிக்கையின் உண்மைப் பொருள் இந்தத் தவணை காலத்தில் திறக்கப்பட்டது.

வருத்தப்பட்டு பாரஞ்சுமப்பவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் என்று முழு உலகத்திற்கும் (யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும்) தேவனைக் கிட்டிச் சேர ஒரு புதுயுகம் பூமியில் மலர்ந்தது. அதுதான் கிருபையின் யுகம். ஆபிரகாம் விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அப்படியே இந்த யுகத்தில் கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் நீதிமான்களாக்கப்படுவார்கள். ஆபிரகாமின் புத்திரர் என்னப்படுவார்கள்.

நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்துபோம் என்ற வார்த்தையின்படி கிருபை வந்த போது நியாயப் பிரமாணம் செயலற்றுப் போயிற்று. எனவே இந்த யுகத்தில் கிருபையினால் இரட்சிப்பு முக்கியப்படுத்தப்படுகிறது. நியாயப்பிரமாண யுகம் மோசே முதல் யோவான் ஸ்நானகன் வரைக்கும் உள்ள வரலாற்றை உள்ளடக்கியது. இது 1718 வருடங்கள்.

## 8 கிருபையின் யுகம்

கிருபையின் யுகம் ஒரு மகிமையான யுகம் காரணம், கிருபையும் சத்தியமும் நிறைந்தவராய் நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்து பூமியிலே உலாவினார். தன் சொந்த ஜீவனை சிலுவையில் ஈந்தது மாத்திரம் அல்லாமல் பொல்லா சாத்தானின் தலையை சிலுவையில் நசுக்கி அவன் சத்துவத்தை உரிந்து போட்டார். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தராயிருந்தது புதிய உறவை உண்டாக்கினார். இது கிருபையின் யுகம் என்று சொல்வதைப் பார்க்கிலும் திருச்சபை யுகம் என்று சொல்வது சாலச் சிறந்ததாகும்.

திருச்சபையின் யுகத்தின் ஆரம்பம் அற்புத அடையாளங்களால் நிறைந்ததிருந்தது. கிறிஸ்து தாமே செய்த அடையாள அற்புதங்களையே அப்போஸ்தலரும் அவருடைய சபையும் செய்ய சிறப்பான வரங்களைத் தந்தருளினார். என்றென்றும் திருச்சபையோடு இருக்கும்படி பரிசுத்த ஆவியானவர் இந்த யுகத்தில் தான் இறங்கி வந்தார். அந்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள் வழி நடத்தி வாக்குக் கடங்காத பெருமூச்சோடு விண்ணப்பம் பண்ணி வெடிமருந்துக் கொப்பான சாட்சியின் பெலத்தைத் தந்து சபையைக் காத்து வருகிறார்.

இந்த யுகத்திற்கு சோதனை ஆயுதம் சத்திய வசனமே. இந்த யுகத்தில் மிகப்பெரிய விசேஷம் என்னவென்றால் இரட்சகனாக இந்த யுகத்தின் துவக்கதில் பூலோகத்திற்கு வந்த இயேசு யுகத்தின் முடிவில் மணவாளனாய் திரும்பி வருவார். ஆகவே இந்த யுகத்தில் அவருடைய சத்திய வசனத்திற்குக் கீழ்ப்படிகிற சபை மணவாட்டியாக எடுத்துக் கொள்ளப்படும்.

இந்த யுகத்திற்கு மொத்தக் கால அளவு எவ்வளவு என்பதை அறிந்து கொள்ள உங்களுக்குப் பேராவல் உண்டு என்பது எனக்குத் தெரியும். ஆகவே இந்த யுகத்தின் கால அளவை சொல்வது எனது கடமை. கிருபையின் யுகத்தின்

மொத்த வருடங்கள் 1996 + x வருடங்கள். இது என்ன கணக்கு? இது வரை 1996 வருடங்கள் ஆகி விட்டது. இயேசு எப்பொழுது வருவார் என்று தெரியாது. அவர் வரும் பொழுது அந்த வருடத்தை சேர்த்துக் கூட்டிக் கொள்ளுங்கள்.

காலாகாலமாய் மறைக்கப்பட்ட சத்தியங்களை பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டு சபைக்கு எழுதிக் கொடுத்தார். சிறப்பாக வருகையைக் குறித்தும் மகிமையைக் குறித்தும் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு தெளிவான தரிசனத்தைக் கொடுத்தார். அதுதான் வெளிப்படுத்தின விசேஷம்.

யூதர்களுக்கு மாத்திரமல்ல, புறஜாதிகளுக்கும் புத்திர சுவீகாரம் உண்டு என்பதனை உறுதிப்படுத்த புறஜாதியனாகிய கொர்நேலியு வீட்டில் (அப்போஸ்தலர் 10 : 44) பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அப்போஸ்தலனாகிய பவுலை புறஜாதிகளின் அப்போஸ்தலனாக தேவன் அழைத்தார்.

கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் உபதேசங்களை நமக்குத் திருமறையில் எழுதிக் கொடுத்துள்ளனர். இந்த உபதேசங்களே இந்த யுகத்தின் சோதனை ஆயுதம். மனுஷரை அளக்கும் அளவு கோல்கள்.

இந்த யுகத்தில் தேவனுடைய பிரதான நோக்கம் என்ன தெரியுமா? ஆதி மனிதனாகிய ஆதாம் மூலம் உலகத்திற்கு எப்படி பாவம் பிரவேசித்ததோ அப்படியே இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் மூலம் 'பாவத்தின் பரிகாரத்தை உண்டாக்குவது. ஆதி மனிதன் தேவசாயலை எப்படி இழந்தானோ அப்படியே இந்த யுகத்தின் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு திரும்ப தேவசாயலைத் தருவது. ஆம்! இந்த உபதேச வசனங்களில் வளர்வோமானால் இந்த யுகத்தின் முடிவில் அவர் வருவார். அவர் வரும்போது நாம் ஜெயம் கொள்ளுவோமானால், அவர் இருக்கிற வண்ணமாகவே அவரின் மகிமை பெற்று அவரை



சந்திப்போம்.

பிரியமானவர்களே, தேவன் நம்மை நியாயப்பிரமாணத்துக்கு அடிமையாக்காமல் அவரின் கிருபையால் நம்மை அழைத்திருக்கிறார். பூரணமான சுயாதீனத்தை நமக்குத் தந்தருளியிருக்கிறார். சபையின் பிரதான நோக்கம் கிறிஸ்துவின் வளர்ச்சிக்குத் தக்க நிறைவான வளர்ச்சியை நாம் பெற்றுக் கொள்ளுவதே (எபேசியர் 4 : 12). சத்திய வசனத்தின்படி வாழ்வு நடத்துவோமானால் அவர் வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்படுவோம்.

இந்தக் கிருபையின் யுகத்தில் இத்தனை சிலாக்கியம் பெற்ற மக்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? வாழ்வளிக்கும் வசனம் இருந்தும். வல்லமை தரும் ஆவியானவர் இருந்தும் வரங்கள் இருந்தும், தோற்றுப் போனார்கள். தோற்றுப் போன ஒரு சிலருக்கு தேவன் உடனடியாக நியாயத் தீர்ப்பை உண்டாக்கினார். சிலருக்கு முடிவான நியாயத் தீர்ப்புக்கென முத்திரை போட்டுள்ளார்.

யூதர்களுக்கு முதலாவது சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. அவர்களோ தள்ளினார்கள். எனவே சுவிசேஷம் புறஜாதிகளுக்கு திசை திருப்பப்பட்டது. இதுவே யூதர்களுக்குக் கிடைத்த நியாயத் தீர்ப்பு.

அடையாளம், அற்புதம் கண்ட ஆதிசபை என்ன செய்தது தெரியுமா? அனனியா, சப்பீராள் தம்பதிகள் வஞ்சித்து ஆவியானவரிடத்தில் பொய் சொல்லி சாபத்தையும் சாவையும் வாங்கிக் கொண்டார்கள். தொடர்ந்து வந்த சபையில் விபசாரம். அஞ்ஞான மார்க்கத்தில் இல்லாத அளவுக்கு ஆளுகை செய்ய ஆரம்பித்தது. (1 கொரி 5 : 1) பொருளாசையும், உதாசினரும், கொள்ளைக்காரரும், சபைக்குள்ளே இருந்தார்கள் (1 கொரி 5 : 11) துர் இச்சையும் விக்கிரகாராதனையும் கூட சபையில் இருந்தது. (கொலோசெயர் 3 : 5)

இப்படிப் படிப்படியாய் கிருபையும் சத்தியத்தைக் குறித்து உணர்வையும் ஆதிசபை இழந்தது. தொடர்ந்து சபை

சரித்திரத்தை கவனித்துப் பார்த்தால் தொடர்ச்சியான விழுகையைக் காணலாம். யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தின் செய்தியைக் கொடுக்கும் போது அக்காலத்திலுள்ள ஏழு சபைகளைக் குறித்து தேவன் பேசும் போது எபேசு சபை ஆதி அன்பை விட்டு விட்டதென்றும், பெர்கமுசபை பொய் உபதேசங்களுக்கு உட்பட்டு விட்டதென்றும், தீயத்தீரா விக்கிரக ஆராதனை சபை என்றும் சர்தை உயிருள்ளதென்று பெயர் பெற்றும் செத்தது என்றும், லவோதிக்கேயா அனலுமில்லாமல் குளிருமில்லாமல் வாந்தி பண்ணப்படத்தக்க நிலையிலுள்ள சபை என்றும் கடிந்து கொண்டார்.

கி.பி.70 இல் இருந்து 170 வரை அப்போஸ்தலர் கால சபை மிகுந்த ஆசீர்வாதமாய் இருந்தது. கி.பி. 170 முதல் 312 வரை சபைக்கு மிகுந்த உபத்திரவகாலமாய் இருந்தது. கி.பி.312 முதல் 606 வரை சபையின் சரித்திரத்தில் மிகப்பெரிய மாறுதல் உண்டாயிற்று.

ரோமப் பேரரசனாகிய கான்ஸ்டைன் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிக் கொண்ட போது அதை அரசு மதமாக அங்கீகாரம் பண்ணினான். ரோமப் பேரரசு கோலோச்சிய எல்லாப் பகுதிகளிலும் கிறிஸ்துவ மதமே வேரூன்றியது. அப்பொழுது தான் கிறிஸ்தவ மதத்தில் மாபெரும் விழுகை ஆரம்பித்தது.

கான்ஸ்டைன் அரசனுடைய பேரார்வத்தாலும் அவருடைய தவறான ஆலோசகர்களாலும் விக்கிரகவணக்கமும் பாபிலோனிய மார்க்கத்தின் சடங்காச்சாரங்களும் உள்ளே நுழைந்தது. பாபிலோனியக் கடவுளின் சிலை, நிம்ரோத் அவன் மனைவியாகிய செமிராமிஸ், செமிராமிஸ்ஸின் தவறான நடவடிக்கையினால் பிறந்த சூரியக் கடவுள் என்னும் பெயருள்ள நினஸ் என்னும் குழந்தையின் உருவமும் சேர்ந்த கூட்டாயிருந்தது.

நிம்ரோத்தை சூசையப்பராகவும், செமிராமிஸ்ஸை மரியாளாகவும், நினஸை ஏசுபாலனாகவும் உருவகப்படுத்தி ரோமக் கிறிஸ்துவ மார்க்கம் சிலை வழிபாட்டை அறிமுகப்படுத்தியது. வேதத்தில் சொல்லாத தூபங்காட்டுதல்



தேர்த்திருவிழா, கல்லறை திருவிழா, உத்தரிக்கும் ஸ்தலம் போன்றவை சபைக்குள் நுழைந்து விட்டது.

கி.பி. 606க்குப் பிறகு போப் அரசருடைய ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. போப் அரசர் பரலோகத் திறவு கோலை தன்னிடத்தில் உள்ள இராயப்பருடைய (பேதுருவுடைய) வழித்தோன்றல் என முகமன் கூறப்பட்டதும் அல்லாமல் அவரே தேவனுடைய ஸ்தானாதிபதி என்றும் அறிமுகப்படுத்தப்பட்டது.

நன்றாய் கவனியுங்கள். ரோமன் கத்தோலிக்க மார்க்கம் தாய் சபை என்று யாராகிலும் சொன்னால் அஃதினை ஏற்றுக் கொள்ளாதீர்கள். கி.பி. 312 வரை அப்படியொரு சபையில்லை. போப் ஆட்சிமுறையும் இல்லை.

1520ஆம் வருட வாக்கில் கர்த்தர் மார்ட்டின் லுத்தரை எழுப்பினார். மார்ட்டின் லுத்தர் 92 தவறான காரியங்கள் ரோமன் மார்க்கத்திலிருப்பதை சுட்டிக் காட்டினார். போப்பினால் கொடுக்கப்பட்ட பல உபத்திரவங்களைத் தாண்டி சீறிப்பாயும் சிங்கமென சீர்திருத்த திருச்சபையைப் பிரித்தெடுத்தார்.

தாய் சபை – சேய் சபை என்று அல்ல. துர் உபதேசத்தினால் பின்மாறிப் போன சபை என்றும் – ஆதி நிலைக்கு ஏகும் சபை என்றும் இரண்டாய்ப் பிரிந்தது.

போப் அரசர் ஆளுகைக்கு உட்பட்ட சபை இன்று வரை தனிக்கிளையாகவும், லுத்தரினால் சத்தியத்திற்குள் நடத்தப்பட்ட சீர்திருத்த சபைகள் தனிக்கிளையாகவும் இயங்கி வருகிறது. இப்பொழுது மீண்டும். இந்த சீர்திருத்த சபைகளிலும் சில பலவீனங்கள் உபதேச விழுகைகள் மீண்டும் வந்ததினால் ஆதிநிலை ஏகுவோம் என்ற தத்துவப்படி தேவ ஆவியானவர் இந்தக் கடைசி நூற்றாண்டில் பரிசுத்த ஆவியை அபரிவிதமாகப் பொழிந்து, மீண்டும் அப்போஸ்தல காலத்து சபைகளை ஆங்காங்கே எழுப்பி வருகிறார்.

**இந்த யுகத்தின் முடிவு எப்படி இருக்கும் :**

கிறிஸ்துவானவர் மகிமை பொருந்திய மணவாளனாய் திரும்ப வரும்பொழுது ஒரு மாபெரும் காரியம் நடைபெறும்.

நோவா காலத்தில் உபத்திரவத்திற்கு முன்பாக எட்டுப் பேரை பேழையில் வைத்துக் காப்பாற்றி மற்றவர்களை ஆக்கினைக்கு ஒப்புக் கொடுத்தது போல அவர் வரும் பொழுது 1 தெசலோனிக்கேயர் 4–ஆம் அதிகாரம் 16, 17ல் சொல்லப்பட்டபடி பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்களை ஆகாயத்திற்கு எடுத்துக் கொள்வார். இந்த உலகம் நியாயத் தீர்ப்புக்கு விடப்படும். இந்த நியாயத் தீர்ப்புகள் ஏழு ஆண்டுகள் நடைபெறும்.

இந்த யுகத்தின் முடிவுக்கு ஏற்படும் நியாயத் தீர்ப்பு இரண்டு வகைப்படும். இது 7 ஆண்டுகள் அந்திக் கிறிஸ்துவின் கரத்தில் இந்த பூமியில் நடைபெறும். அந்திக் கிறிஸ்துவினால் பூரணமாக்கப்படாத கிறிஸ்தவர்களுக்கும், மேசியாவைத் தள்ளின யூதர்களுக்குக்கும் நியாயத் தீர்ப்பு ஏற்படும். அப்படியே அந்திக் கிறிஸ்துவுக்கும் அவனுடைய ஆட்களுக்கும் தேவனுடைய கோபாக்கினையின் கலசங்களினால் உபத்திரவங்கள் ஊற்றப்படும்.

இந்த உபத்திரவத்தின் முடிவு காலத்தில் இயேசு தாம் எடுத்துக் கொண்ட பரிசுத்தவான்களோடு இறங்கி வருவார். அத்தோடு கிருபையின் யுகம் முடியும். கிருபையின் யுகம் முடிவடைவது மாத்திரமல்ல. பிரளயத்திற்குப் பிந்தின காலமும் முடிவடைகிறது. இயேசுவும் அவரோடு இறங்கி வரும் பரிசுத்தவான்களும் ஆயிரம் வருடம் பூமியை ஆளுவார்கள். அந்த யுகத்தைக் குறித்து அடுத்த அத்தியாயத்தில் வாசிப்போம்.

| |
|---|
| அந்திக் கிறிஸ்து ஆட்சியைக் குறித்து தெளிவாக அறிந்து கொள்ள விரும்பினால் ‘இயேசு கிறிஸ்துவும் அந்திக் கிறிஸ்துவும்’ என்ற என்னுடைய புத்தகத்தை வாங்கி வாசியுங்கள். |

# 9 இனி வரும் காலமும் கிறிஸ்துவின் யுகமும்

ஜலப்பிரளயத்திற்கு முந்தின காலத்தில் குற்றமில்லாமையின் யுகமும், மனச்சாட்சியின் யுகமும் தோல்வியில் முடிந்ததினால் வெள்ளத்தால் உலகு அழிக்கப்பட்டது. பூமியின் இயற்கையில் மாபெரும் மாறுதல் ஏற்பட்டது. ஜலப்பிரளயத்திற்குப் பிந்தின காலத்தில் (அதாவது தற்காலம்) உள்ள மனித அரசாட்சியின் யுகம், வாக்குத் தத்தத்தின் யுகம், நியாயப் பிரமாண யுகம், கிருபையின் யுகம் ஆகிய யுகங்கள் முடியும் போது ஆயிர வருட அரசாட்சி என்னும் யுகம் ஆரம்பிக்கும். இது ஒரு யுகம் மாத்திரமல்ல. இது இனிவரும் காலம் என்று அழைக்கப்படுகிறது.

நாம் ஏற்கனவே கவனித்தபடி ஒரு காலம் துவங்கும் போதும் முடியும் போதும் இயற்கையில் மாபெரும் மாற்றம் ஏற்படும். அப்படியே ஒரு யுகம் துவங்கும் போதும் முடியும் போதும் தேவனுடைய திட்டத்தில் மாபெரும் மாற்றம் ஏற்படும். இந்த இலக்கணத்தின்படி இனிவரும் காலத்தில் (ஆயிர வருட அரசாட்சி) இயற்கையில் மாபெரும் மாற்றங்கள் ஏற்படும். வனாந்தரம் வயல்வெளியாக மாறும், வெட்டாந்தரை நீர்த்தடாகமாக மாறும்.

விருட்சங்கள் அதனதன் கனியை நேர்த்தியாய்க் கொடுக்கும். மிருக ஜீவன்களின் பழக்கங்கள் மாறுபடும். சிங்கம் ஆட்டைப் போல் வைக்கோல் தின்னும். ஆடும் ஓநாயும் ஒன்றாய் படுத்திருக்கும். சிறுவன் சிநேகமுடன் ஸ்நேக்(Snake) இடம் விளையாடுவான். ஸ்திரீகள் கர்ப்ப வேதனையில்லாமல் பிள்ளை பெறுவார்கள்.

கூடுதலாக சொல்லப் போவோமானால் குற்றமில்லாமையின் யுகத்தில் இந்தப் பூமி எப்படி இருந்ததோ அப்படியே ஆகும். தேவன் தாமே நேரடியாக தமது மகிமையின் பிரசன்னத்தால் இந்தப் பூமியை நிறைப்பார். நிறைத்து ஆளுவார்.

இந்த புத்தகத்தை நான் எழுதிக் கொண்டிருக்கும் போது எனது முந்தைய புத்தகத்தை வாசித்த சிலர் ''ஆயிர வருட அரசாட்சி பூமியில் நடக்குமா? உண்மையில் 1000 வருடம் நடக்குமா? என்று கடிதம் எழுதி உள்ளனர். இதற்கு பதிலை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1000 வருட ஆட்சி நிச்சயமாக ஆயிரம் வருடம் இந்த பூமியில் தான் நடக்கும். பூமியில் மேசியாவாகிய கிறிஸ்து தாவீதின் குமாரனாக சிங்காசனத்தில் அமர்ந்து இந்த பூமியை ஆளுவார் என்பதற்கு பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடு வரை ஐம்பதுக்கும் மேற்பட்ட வசன ஆதாரங்கள் உண்டு.

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும். அவர் தாவீதின் சிங்காசனத்தை திடப்படுத்தி நித்தியமாய் ஆளுவார் என்று ஏசாயா 9 : 6, (7 வசனங்களிலும், கைகளால் பெயர்க்கப்படாத கல் (கிறிஸ்து) வானத்தில் இருந்து உருண்டு வந்து சிலையின் (உலக அரசுகள்) மேல் மோதி தூளாக்கி தானே பூமி முழுவதும் நிரப்பிற்று என்று தானியேல் 2 : 44 இலும், வானத்தின் கீழெங்குமுள்ள (பூமியில்) ராஜ்ஜியங்களின் ராஜரீகமும், ஆளுகையும் மகத்துவமும் உன்னதமான வருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம் என்று தானியேல் 7 : 27 இல் எழுதப்பட்டுள்ளது.

மேலும் ''கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜா வாயிருப்பார் – எருசலேம் சுகமாய் தங்கி இருக்கும்'' என்று சகரியா 14 : 9 முதல் 11 வசனங்கள் வரை எழுதப்பட்டுள்ளது. வெளி 5 : 10 ல் நான்கு ஜீவன்களும் மூப்பர்களும் ''நாங்கள் பூமியில் (வானத்தில் அல்ல) அரசாளுவோம்'' என்று புதுப்பாட்டைப் பாடினார்கள்.

எனவே கிறிஸ்து இந்தப் பூமியை தமது பரிசுத்தவான்களுடன் ஆளுவார் என்று தெரிகிறது அல்லவா? எனினும் இந்த ஆட்சி 1000 ஆண்டுகள் நடக்குமா? என்ற கேள்வி சிலருக்கு உண்டாகலாம் அது



1000 ஆண்டுகள் தான் என்று வெளிப்படுத்தல் 20–ஆம் அதிகாரம் 2 முதல் 7 வரை உள்ள ஆறு வசனங்களில் ஆறுமுறை உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெளிப்படுத்தலில் வரும் எண்கள் உவமை எண்கள். எனவே 1000 வருடம் என்று கூற முடியாது என்று திரிபுக் கொள்ளைக்காரார்கள் கூறுவர். வெளிப்படுத்தல் முழுவதும் வாசித்துப் பாருங்கள். ஏழு நட்சத்திரம், ஏழு குத்து விளக்கு, ஏழு முத்திரை, ஏழு ஆவிகள் என்று பலமுறைவரும். இவைகளில் எழு என்பது எழுத்தின்படி ஏழைத்தான் குறிக்கிறதே தவிர ஆவிக்குரிய அர்த்தம் ஏதும் இல்லை. அதைப் போலவே 1260 நாட்கள் என்ற நாட்கள் அப்படியே எழுத்தின்படியே அர்த்தம் கொள்கிறோம். எனவே 1000 வருடம் என்பது ஆவிக்குரிய அர்த்தமல்ல. அது எழுத்தின்படியே 1000 ஆண்டுகள்.

மற்ற யுகங்களில் தேவனின் பிரமாணம் மக்களை ஆண்டது. ஆனால் இந்த யுகத்தில் கிறிஸ்துவே ராஜாதி ராஜாவாய் இருந்து இந்தப் பூமியை அரசாளுவார். அவரோடு கூட மணவாட்டியாய் எடுத்துக் கொள்ளப்பட்ட சபையும் இந்தப் பூமியை ஆளும். அப்போஸ்தலர்கள் 12 பேரும் இஸ்ரவேலரின் 12 கோத்திரத்தை ஆளுவார்கள்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்ற பிதாக்களுக்கு தேவன் சொன்ன வாக்குத்தத்தங்களில் இதுவரை நிறைவேறாத அனைத்தும் அன்று ஏகமாய் நிறைவேறும். எருசலேம் தலைநகரமாகவும், கிறிஸ்துவின் ஸ்தலமாகவும் இருக்கும். இஸ்ரவேலர் இளைப்பாறுதல் பெறுவார்கள்.

மற்ற யுகங்களை விட இந்த யுகத்தின் மிகப்பெரிய சிறப்பு என்னவெனில் மற்ற யுகங்களில் மக்களை விழப்பண்ணின 'பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய' வலுசர்ப்பத்தைப் பிடித்து இந்த ஆயிரவருடம் மட்டும் பாதாளத்தில் அடைத்து வைப்பார்கள். தேவனுக்கு விரோதமாய் மக்களைத் தூண்டுகிறவன் பூமியில் இல்லாததினால் இந்த ஆயிர வருடம் மக்கள் குணசாலிகளாயிருப்பார்கள் (ஏசாயா 65 :

18 முதல் 25)

ஏசாயா 65 : 18 மற்றும் ஏசாயா 66 : 22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ள ''புதிய வானம், புதிய பூமி'' ஆகிய வசனங்களைப் பார்த்து விட்டு நித்தியத்தைக் குறித்து எழுதப்பட்டுள்ளது என்று தவறாக புரிந்து கொள்கின்றனர். உண்மை அதுவல்ல. ஆயிரமாண்டு ஆட்சியின் துவக்கத்தில் இந்த பூமியின் சாபம் மாற்றப்பட்டு பூமி ஆதிநிலைக்குயேகி ஏதேனைப் போல் மாறும். அதைப் போலவே சந்திரன் சூரியனைப் போலவும் சூரியன் ஏழு மடங்கு (ஏசாயா 30 : 26) வெளிச்சம் கொடுக்கும். இந்த மாற்றமே ''புதிய பூமி புதிய வானம்'' எனப்படும். 1000 ஆண்டு முடிவில் மீண்டும் இந்த பூமியில் வானமும் அக்கினியால் புதுப்பிக்கப்பட்டு புதிய வானம் புதிய பூமி தோன்றி நித்தியமாய் இருக்கும் (வெளி 20 : 11; II பேதுரு 3 : 7, வெளி 21 : 1)

இந்த ஆயிர வருடத்தில் மக்கள் தொகை மிக வேகமாய்க் கூடிவிடும். காரணம் 1. மனிதருக்கு வியாதி இராது. 2. ஆயுசு நாட்கள் விருத்தியாக்கப்படும் 3. கர்ப்ப வேதனையில்லாதபடியினால் அடிக்கடி பிள்ளைப் பேறு நடக்கும். மனிதர்கள் மொத்தத்தில் சுகமாய்க் குடியிருப்பார்கள்.

தேவன் இந்த யுகத்தை சோதிப்பதற்கு ஒரு சோதனையை வைத்திருக்கிறார். இந்த ஆயிர வருட முடிவில் பாதாளத்தில் கட்டப்பட்டிருக்கிற சாத்தானை (வெளி 20 : 7, 8) கட்டவிழ்த்து விடுவார். அவன் சொற்ப காலம் மீண்டும் தனது வல்லமையைத் தரித்துக் கொள்வான்.

இந்தப் பிசாசு தனது முடிவை அறிந்திருக்கிறதினால் பூமியின் குடிகளில் அநேகரை வஞ்சிப்பான். கிறிஸ்துவின் ஆட்சியின் போது அமைதலாய் இருந்தவர்களில் அநேகர் அவனோடு சேர்த்து கொண்டு இயேசுவோடு யுத்தம் செய்ய வருவார்கள். இதில் கோகு மாகோகு ஆகிய தேசத்தார் முக்கிய அங்கம் வகிப்பார்கள்.

இந்த யுகத்தின் சோதனை முடியும் போது



தேவனுடைய நியாயத் தீர்ப்பு உக்கிரமாய் எரியும். முதலாவதாக மக்களை மோசம் போக்கின சாத்தானை தேவன் அக்கினிக் கடலில் போடுவார்.

மகிமையின் ராஜ்ஜியத்தில் புதிய வானம் புதிய பூமி புதிய எருசலேம் இருப்பது போல தண்டனைக்கு மூன்று இடங்கள் உண்டு.

1. அந்தகாரம். இங்கே தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களை தேவன் அடைத்து வைத்திருக்கிறார். (யூதா 6–ஆம் வசனம்).

2. பாதாளம் (Bottomlesspit) இங்குதான் சாத்தான் ஆயிர வருடம் அடைத்து வைக்கப்படுவான்.

3. அக்கினிக் கடல் (வெளி 20 : 10) இவ்விடத்தில் தான் நித்திய காலமாய் சாத்தானும், அவனுடைய தூதரும், ஆக்கினை தீர்ப்பு பெற்ற மானிடரும் ஆக்கினை அடைவார்கள்.

சாத்தானை அக்கினிக் கடலில் போட்டவுடன் மனுக்குலத்தின் மேல் உண்டான நியாயத்தீர்ப்பை தேவன் வெளிப்படுத்துவார். இந்த யுகத்தின் மக்கள் மாத்திரமல்ல உலகத்தோற்றம் முதல் ஆயிர வருட ஆட்சி முடிவு உள்ள எல்லா மக்களும் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

வானமும் பூமியும் அகன்று போகும். தானியேலில் சொல்லப்பட்டபடி நித்திய நிந்தைக்கும், நித்திய ஜீவனுக்கும் உயிர்தெழுவார்கள். வானம் ஒரு பாயைப்போல் சுருட்டப்படும். பூமி அகன்று போகும். அப்பொழுது தேவனுடைய வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பு தோன்றும். மரித்தோராகிய சிறியோரும், பெரியோரும் தேவனுக்கு முன்பாக நிற்பார்கள் புஸ்தகமும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்படும். அவைகளில் எழுதப்பட்டபடியே அவரவர் தங்கள் தீர்ப்பை அடைவார்கள்.

மல்கியா 3:16 இல் அவருடைய சமூகத்தில் ஞாபக புஸ்தகம் ஒன்று உள்ளது என்று எழுதப்பட்டிருக்கிறது. வங்கிகளில் நமது வரவு செலவுகளை மறக்காமல் குறிப்பது போல் மனிதருடைய ஒவ்வொரு கிரியைகளும் பரலோகத்தில்

பதிந்து கொண்டிருக்கிறது. அவைகள் (Audio and Video) ஒலி, ஒளியாக பதிக்கப்பட்டிருக்கும் சகலமும் அவருக்கு முன்பாக இருக்கிறது. ஒன்றும் மறைவாக இல்லை.

ஆகையால் அருமையான தேவபிள்ளையே! கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து தேவ திட்டத்திற்கு செவி கொடுங்கள். ஜீவபுஸ்தகத்தில் பேர் எழுதப்படாதவன் எவனோ அவனும் அக்கினிக் கடலில் தள்ளப்படுவான் என்று எழுதியிருக்கிறது. உங்கள் பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா ஆராய்ந்து பாருங்கள்.

பல்வேறு காலக்கட்டத்திலும் யுகங்களிலிருந்தும் உயிரோடு எழும்பினவர்கள் எந்த அடிப்படையில் நியாயந் தீர்க்கப்படுவார் என்ற சிந்தை உங்களுக்கு எழலாம். அவர் வருகிறார். அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களை சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார் என்று சங் 96:13 இல் எழுதப்பட்டுள்ளபடியே நியாயந்தீர்ப்பார்.

நியாயப் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பிருந்த எல்லா மக்களும் ரோமர் 2:14,15–இன்படி அவர்கள் மனசாட்சிப் பிரமாணத்தினால் நியாயத் தீர்க்கப்படுவார்கள். நியாயப்பிரமாண காலத்திலிருந்த பரிசுத்தவான்கள் எல்லாரும் ரோமர் 2:16ன் படி சுவிசேஷத்தினால் (வேத வசனத்தின்படி) நியாயந் தீர்க்கப்படுவார்கள்.

இந்த நியாயத்தீர்ப்புக்குப் பின் ஆக்கினைக்குட்பட்ட வர்கள் அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள். அப்பொழுது புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும். இத்தோடு இந்த யுகமும் இந்தக் காலமும் முடிவடைகிறது. இதற்குப்பின் யுகங்கள் கிடையாது. நித்தியக் காலமே உண்டு.

# 10 காலங்களின் காலமும் பரிபூரண யுகமும்

ஆயிர வருட அரசாட்சிக்குப் பின்னர் கோகு–மா– கோகு யுத்தமும் வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பும் நடைபெறும் என்று கடந்த அத்தியாயங்களில் வாசித்தோம். அதனைத் தொடர்ந்து II பேதுரு 3:7ல் சொல்லப்பட்டபடி இந்த பூமி அக்கினியினால் பரீட்சிக்கப்பட்டு புதுப்பிக்கப்படும். அதன்பின் புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும். இதுவே நித்தியம் என்று அழைக்கப்படும்.

பூமி வெந்து போகுமா? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். அவபக்தியுள்ள சோதோம் கொமராவை தேவன் வானத்திலிருந்து கந்தகத்தையும், அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி அழித்துப் போட்டார் என்று ஆதி 19:25 இல் வாசிக்கிறோம்.

ஆனால் இப்பொழுது இந்தப் பூமி தன்னைத்தானே எரித்துக் கொள்ளும். இந்த பூமியின் அடிப்பரப்பில் ஏராளமான எரி எண்ணையும், எரிவாயுவும், நிலக்கரியும் நிரம்பியிருக்கிறது. நவீன அறிவியல் முன்னேற்றத்தில் ஏராளமான அணுகுண்டுகளும், நியூட்ரான் குண்டுகளும் இந்தப் பூமியின் அடியில் விஞ்ஞானிகள் புதைத்துப் பாதுகாத்து வருகின்றனர். இந்தப் பூமியைப் போல் 30க்கும் மேற்பட்ட பூமிகளை ஒன்றுமில்லாமல் அழிக்கும் அளவிற்குப் போதுமான அணுசக்தி ஆயுதங்கள் உலகளவில் உள்ளதாக பத்திரிக்கை செய்திகள் கூறுகிறது.

ஒரு சிறிய நில நடுக்கம் ஏற்படுமாயின் பூமிக்குள்ளே இருக்கிற அத்தனையும் வெளியே வரும் பூமி தன்னைத்தானே எரித்துகொள்ளும். இதற்குப்பின் பாவ சாபமில்லாத புதிய வானமும் புதிய பூமியும் தோன்றும். இந்தப் புதிய பூமியில் சமுத்திரம் இருக்காது. (வெளி 21:1)

இந்தப் புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேம் ஆகிய மகிமையின் ராஜ்ஜியத்தில் இரவு, பகல் இராது. கர்த்தர் தாமே வெளிச்சமாய் இருப்பார். புதிய எருசலேம்

பரலோகத்தை விட்டு இறங்கி புதிய பூமியில் சேர்ந்திருக்கும். ஆட்டுக்குட்டி யானவரும் அவருடைய ஜனமும் ஒன்றாய் இருப்பார்கள்.

நித்திய வாழ்க்கை யோசித்து அறிய முடியாத அளவிற்கு மகிமை பொருந்தியதாய் இருக்கும். இரவு, பகல் இல்லாததினால் அங்கே நாட்களின் கணக்கு இராது. ஆகிலும் மாதக் கணக்கை மிகத்துல்லியமாகக் கண்டு கொள்ளலாம்.

வெளிப்படுத்தின விசேஷம் 22 ஆம் அதிகாரம் 2ஆம் வசனத்தை வாசித்துப்பாருங்கள். இங்கே ஒரு அற்புத விருட்சம். விருட்சத்தின் பெயர் என்ன தெரியுமா? காலண்டர் விருட்சம். அது 12 விதமான கனிகளைத் தரும். அது என்னென்ன கனிகள் தெரியுமா? சித்திரைக் கனி, வைகாசிக் கனி, ஆனிக்கனி, ஆவணிக்கனி,..... பங்குனிக்கனி அப்பப்பா! நினைக்கவே புல்லரிக்கிறது.

மரம்தான் இப்படி. கனிதான் அப்படி என்று யோசித்தால் இலை எப்படித் தெரியுமா? ஜனங்களின் ஆரோக்கியத்திற்கு ஏதுவானவைகள்.

நித்தியத்தில் நாம் சாப்பிடுவோமா? நிச்சயமாக உங்களுக்கு சாப்பாடு கிடைக்கும். நீங்கள் கவலைப் படவேண்டாம். இஸ்ரவேலர் வனாந்திரத்தில் சாப்பிட்ட மன்னாவைக் குறித்து துாதர்களின் அப்பம் என்று சங்கீதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அது நிச்சயமாய் நமக்குக் கிடைக்கும். மாதந்தோறும் புதுக்கனிகள் நாம் புசிக்கும் படியாகத்தான் பரலோக விருட்சத்தில் விளைகிறது.

பரலோகத்தில் எங்கு தங்குவோம்? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்களுண்டு. (யோவான் 14:2,3) என்று இயேசு சொன்னதை நினைவு கூருங்கள். அது கை வேலையில்லாத வீடு. அது நித்திய வீடு. தேவன் தாமே உங்களுக்கும் எனக்கும் அங்கே வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார். அங்கே நாம் வாடகை கொடுக்காமல், வசையும் வாங்காமல் வாழ்வாங்கு வாழப்போகிறோம்.



நாம் அங்கு என்ன செய்யப்போகிறோம்? என்று கேட்கிறீர்களா? நமது அருமை இரட்சகர் இயேசுவோடு கூட அளவளாவப் போகிறோம். சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிற தேவனோடு சேர்ந்து வாழப் போகிறோம். தேவ துாதர்களோடு தேவனைப் புகழப் போகிறோம்.

நமது முன்னோர்களையும், நமது நண்பர்களையும் அங்கே காணப்போகிறோம். மோசேயையும் எலியாவையும் பார்ப்போம். சீர்திருத்த சபையின் சிங்கம் மார்ட்டின் லுத்தரைப் பார்ப்போம். என் அன்புக்குரிய ஆவிக்குரிய தந்தை போதகர் சுந்தரம் அய்யா அவர்களைப் பார்ப்போம். நம்மோடு வாழ்ந்து நமக்கு முன் மகிமைக்குள் சென்ற நம்மவர்களைப் பார்ப்போம்.

ஒன்றிரண்டு ஆண்டுகளல்ல. ஆயிரமாயிரமான ஆண்டுகள். மன்னிக்கவும். பல மில்லியன், ட்ரில்லியன் ஆண்டுகள் அவரோடு கூட இருப்போம். அதுதான் நித்திய வாழ்க்கை. முந்தின நித்தியத்தில் 'அல்பா' வாயிருந்த ஆண்டவர் பிந்தின நித்தியத்தில் 'ஒமெகா' வாய் இருப்பார்.

இந்த நித்தியத்தின் துவக்கத்தில் ஒரு முக்கியமான சம்பவம் நடைபெறும். இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலிப்பியர் 2:10,11) என்ற வேத வசனம் நிறைவேறப் போகிறது.

இதுவரை இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை. ஏனெனில் பூமியிலுள்ள எத்தனையோ ஜாதிகள், கிறிஸ்துவைக் கர்த்தரென்று அறிக்கை பண்ணவில்லை. ஆயிர வருட அரசாட்சியிலும் இஃது நிறைவேற பூரணமான வாய்ப்பில்லை. ஏனெனில் வானோர்கள் கர்த்தரைப் புகழுகிறார்கள். பூமியிலும் மக்கள் இயேசுவைப் புகழுகிறார்கள். ஆனால் 'பூமியின் தாழ்விடத்தோர்' என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறாமல் தொக்கி நிற்கும்.

ஆயிர வருட அரசாட்சியின் போது பிசாசானவன் பூமியின் அடியில் அடைத்து வைக்கப்படுவான்.

பாதாளத்திலுள்ள எதுவும் கிறிஸ்துவை அறிக்கை பண்ணாது. ஆயிர வருட முடிவில் அவிழ்த்து விடப்பட்ட பிசாசு ஆண்டவருக்கு விரோதமாய் யுத்தத்திற்கு வருகிறான்.

ஆனால் நித்திய காலத்தில் பிசாசு முழுவதுமாய் சங்கரிக்கப்படுவான். அப்பொழுது கிறிஸ்து வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோர் எல்லாராலும் கர்த்தரென்று அறிக்கை செய்யப்படுவார். அந்நாட்களில் கிறிஸ்து தாமே நித்தியத்தில், குறிப்பிட்ட காலத்திற்கு ஆளுகை செய்வார். அதன்பின் இயேசுவும் தமது ஆளுகையைப் பிதாவினிடத்தில் கொடுத்து விட்டு நம்மைப்போல் பிதாவுக்குக் கீழ்ப்பட்டிருப்பார். (I கொரி 15:27,29ஐ கண்டிப்பாக வாசித்துப்பார்க்கவும்) நித்திய காலத்தில் இயேசு கிறிஸ்து ஆளப்போகிற நாட்கள் பரிபூரண யுகம் என்று அழைக்கப்படும். இது எத்தனை ஆண்டுகள் அல்லது காலம் என்பது ஆண்டவருக்கே தெரியும்.

உலகத்தோற்றத்திலிருந்தே தேவனுடைய விருப்பம் என்னவென்று நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். மனுக்குலத்தை எப்படியாகிலும் தம்மோடு மகிமையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அவரது சித்தம். மனுக்குலம் விழும்போதெல்லாம் தேவனும் மனமிரங்கி தமது இரட்சிப்பின் திட்டங்களை புதுப்பித்துக் கொண்டே வந்தார். தமது மீட்பின் கிரியையில் உச்சக்கட்டமாக தமது குமாரனைத் தந்தருளினார்.

பாவத்தின் சம்பளம் மரணம். நம்முடைய தேவனுடைய வரமோ கிறிஸ்துவினால் உண்டாகிற நித்திய ஜீவன். நீர் இந்த நித்திய ஜீவனுக்கு தகுதி உள்ளவராய் இருக்கிறீர்களா? என்பதை யோசித்துப் பாருங்கள். நமது வேதாகமம் கட்டுக்கதை அல்ல. இது ஒரு காலக்கடிகாரம். இது கர்த்தரின் சித்தத்தை வெளிப்படுத்தும் கண்ணாடி.

ஒருமுறை தன் ஜீவனைக் கொடுக்க வந்த கிறிஸ்து நித்திய ஜீவனுக்கென்று தமது ஜனத்தை அழைக்க திரும்ப வரப்போகிறார். அந்த வருகையில் பிரவேசிப்பவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் அவரோடு ஆனந்திப்பார்கள்.



அவருடைய வருகையில் கைவிடப்படுகிறவர்கள் மிகவும் பரிதாபத்துக்குரியவர்கள். அவர்களுக்கு இந்த உலகத்தில் மிகப்பெரிய உபத்திரவம் சூழப்போகிறது.

உலகத்தில் உபத்திரம் மாத்திரமல்ல. உலக முடிவில் மிகப்பெரிய நியாயத் தீர்ப்பு இருக்கிறது. அந்த நியாயத் தீர்ப்பின் முடிவில் இரண்டாம் மரணமாகிய அக்கினிக் கடல் அவர்களுக்கு அருளப்படும். ஐயோ! அந்த வேதனையை யாரால் தாங்க முடியும்? அதை யாரால்தான் விவரித்துச் சொல்ல முடியும்?

'நரகம்' அது வேதனையுள்ள இடம். அங்கு சரீரம் துடிக்கும். நம்முடைய நினைவுகளால் மனம் துடிக்கும். தாகத்தால் நா துடிக்கும். அது ஒரு நம்பிக்கையற்ற இடம். அற்ப காலத்தில் அணைந்துபோகும் என்று யோசிக்காதீர்கள். சொர்க்கலோகம் எப்படி நித்தியமானதோ அப்படியே நரகலோகமும் நித்தியமானது. அங்கே அவர்கள் புழு சாகாது. அக்கினி அவியாது. அவர்களுடைய வாதையின் புகை சதாகாலமும் எழும்பும் (வெளி 14:11, 20:10) என்று வேதம் சொல்கிறது.

நீங்கள் ஆயத்தந்தானா? இப்பொழுது இரக்கமுள்ள தேவன் அப்பொழுது எரிச்சலுள்ள தேவனாய் வெளிப்படுவார். இன்னும் கொஞ்ச காலத்தில் குமாரனுடைய கோபம் பற்றியெரியும். நீங்கள் அழிந்து போகாதபடி அவருடைய பாதத்தை முத்தம் செய்யுங்கள். இரத்தத்தினால் உண்டாகும் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஜலத்தினால் அவரோடு நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாகிய ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று நீதிமான்களாகுங்கள். கர்த்தர் உங்களை மகிமைக்கென்று ஆயத்தப்படுத்துவாராக.

"உள்ளமே நீ திறவாயோ!
உருகும் சத்தம் நீ கேளாயோ!
உன் கரம்பற்றி உன்னை நடத்த
உன் நெஞ்சை ஆவலாய் தட்டுகிறார்"
ஒப்புக்கொடுங்கள். செயல்படுங்கள். ஆமென்!

# விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**